பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 06 சனிக்கிழமை (19.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :113

### நேற்றைய பேரணியின் போது வலி.வடக்கு மக்கள் ஆவேசம்

# பாதுகாப்பு வலயத்தை நோக்கி முன்னேறிய ஆர்ப்பாட்டக்காரரைப் பொலீஸார் தடுத்தனர்!

வலி.வடக்கு.மார்ச் 19

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தங்களின் சொந்த நிலங்களுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டு வலி.வடக்குப் பிரதேச மக்கள் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் ஒருகட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டு தெல்லிப்பழையில் உயர் பாதுகாப்பு வலய முன்னரங்க வேலியை நோக்கிச் செல்வதற்காகப் பொலீஸ் நிலையத்தைத் தாண்டிப் பிரவேசிக்க முயற்சித்ததால் அங்கு பெரும் களேபரம் உருவாகியது.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலடியில் ஒன்று கூடிய இடம் பெயர்ந்த மக்கள் அங்கிருந்து முற்பகல் 10 மணியளவில் பேரணியாக அணிவகுத்தனர். பெரும் எண்ணிக்கையான பாடசாலை மாணவர்கள் உட்பட இடம்பெயர்ந்த மக்கள் அங்கிருந்து தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தை நோக்கி நகர்ந்தனர். 'எங்கள் நிலத்தில் எங்களை வாழ விடு!' என்று கோஷம் எழுப்பியவாறு சுலோக அட்டைகளையும்



சுமந்துகொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் நீண்ட அணியாகச் சென்றனர். பேரணியின் முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், கி.சிவனேசன், மாவை சோ. சேனாதிராஜா, திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தலைமை வகித்துச்சென்றனர். வலி.வடக்குப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசப் பிரதிநிதிகள், விவசாயிகள் உட்பட ஏனையோர் அவர்களின் பின்னே சென்றனர்.

பேரணி தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தை அண்மித்ததும் வீறுகொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலகத்தின் வடக்குப் பக்கத்தில் பொலீஸ் நிலையம் அமைந்துள்ள வீதி வழியாக முன்னேறி உயர்பாதுகாப்பு வலயப் பகுதியின் முன்னரங்குக்குச் செல்வதற்காகப் பொலீஸ் நிலையைத்தைத் தாண்டிப் பிரவேசிக்க முயன்றனர்.

அங்கு ஆயத்த நிலையில் நிறுத்தப்பட்டிருந்த கலகம் அடக்கும் பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை (16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்பை அரசு ஏற்கக்கூடியதாக மாற்ற முயற்சி

## இலங்கை சமாதானச் செயலகத்துடன் நோர்வே தொடர்ந்தும் பேசுகின்றது

கொழும்பு,மார்ச்19

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைக் கையாள்வதற்கான பொதுக் கட்டமைப்புத் திட்டத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக மாற்றும் முயற்சியில் அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். இது தொடர்பாக இலங்கை அரசின் சமாதானச் செய்லகத்துடன் நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றார்கள். நேற்றுமுன்தினம் இதுதொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றன.**

இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசுத் தரப்பும், புலிகள் தரப்பும் தெரிவித்த யோசனைகளின் அடிப்படையில் திட்டம் ஒன்றை நோர்வே வடிவமைத்திருந்தது என்பதும் -

அந்தத் திட்டத்தை ஏற்கத் தாங்கள் தயார் எனப் புலிகள் தரப்பினால் நோர்வேக்குத் தெரியப்படுத்தப்பட்டுவிட்டது என்பதும் - தெரிந்தவையே.

எனினும், நோர்வே பிரேரித்த திட்டத்தை இலங்கை அரசுத் தரப்புப் பரிசீலிப்பதாகவும் -

அது இன்னமும் அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கவில்லை எனவும் - செய்திகள் வெளியாகியிருந்தன.

நோர்வே பிரேரித்த திட்டத்தில் சில அம்சங் (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,மார்ச்19

கிளிநொச்சி நகரப்பகுதியில் கிரிக்கெட் கிராமம் அமைப்பதற்கு 70 ஏக்கர் நிலம் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நிலத்தில்வாழும் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி அரசறிவியல் நகரப் பகுதியில் கிரிக்கெட் கிராமம் அமைப்பதற்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு 70 ஏக்கர் நிலத்தை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஒதுக்கியிருந்தார். ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த பிரதேசத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் பிரமுகரை வழக்கில் இறுக்க முயற்சி!

கொழும்பு,மார்ச்19

பொதுத் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் அலுவலகத்திற்குள் புகுந்து சேதம் விளைவித்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட ஜே.வி.பியின் முக்கிய புள்ளி ஒருவருக்கெதிரான விசாரணைகளை முடுக்கி விடுமாறு அரச உயர் மட்டத்திலிருந்து பொலீஸ் திணைக்களத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் நடைபெற்று நீண்ட நாள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் கடமையாற்றும் அமெ.பிரஜைகளுக்கு தூதரகம் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்19

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கடமைகளுக்காகத் தங்கியிருக்கும் அமெரிக்கப் பிரஜைகள் தமது கடமைநேரங்களிலும், போக்குவரத்தில் ஈடுபடும் போதும் அவதானமாக இருக்க வேண்டுமென கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கிழக்கில் தொடரும் வன்முறைகள் மற்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு மூலம் சமாதான முயற்சியில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பலாம்

### ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி புலிகளிடம் தெரிவிப்பு

பிரஸல்ஸ்.மார்ச்19

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணச் செயற்றிட்டங்களில், சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் பங்கேற்கும் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலம் சமாதான முயற்சிகளில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேர்வ் யுயான்ஜியன். நேற்றுமுன்தினம் பிரஸல்ஸில் தம்மைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினரிடமே அவர் இதனை வலியுறுத்தினார்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் ஜேர்மனியில் இருந்து நேற்றுமுன்தினம் பெல்ஜியம்சென்று சேர்ந்தனர்.

பிரஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்துக்கும் அவர்கள் சென்றனர். அங்கு நடந்த சந்திப்பின்போது பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் தற்போதுள்ள நிலைமை குறித்து தமிழ்ச்செல்வன் வெளியுறவுத்துறைப் பதில் பணிப்பாளர் நாயகத்திடம் விளக்கினார். இந்தக்கட்டமைப்பை உருவாக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

### மருத்துவ மாணவர் பிரச்சினை

## சுமுகமான தீர்வு குறித்து ஆராய நடவடிக்கைக் குழு நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கை நெறியை மீள ஆரம்பிப்பதற்கான சுமுக நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய நடவடிக்கைக் குழு ஒன்றை யாழ். பல்கலைக் கழகப் பேரவை நியமித்துள்ளது.

மருத்துவ பீட மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக விசேட பேரவைக் கூட்டம் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இந்தப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வுகாண்பதற்கான செயற்பாடுகளை முன்னெ

(16ஆம் பக்கம் பார்க்க)

## தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு தினம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்19

இந்திய அரசுக்கு எதிராக மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயமுன்றிலில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று ஆரம்பமாகிறது. தமிழர் தாயகப் பகுதிகளில் அடுத்தமாதம் 19ஆம் திகதிவரையான ஒரு மாத காலத்துக்கு அன்னை பூபதியின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்படும். வன்னிப் பிரதேசத்தில் அன்னை பூபதியின் நினைவுதினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்று காலை 9 மணிக்கு தேசியக்கொடி ஏற்றல், பொதுச்சுடர், ஈகச்சுடர் ஏற்றல், அகவணக்கம் என்பவற்றுடன் (16ஆம் பக்கம் பார்க்க)



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பட்டதாரி நியமன சம்பளத்திட்டத்தில் மாகாணங்களுக்கு இடையில் வேறுபாடு

யாழ்ப்பாணம்,மார்ச்19

பட்டதாரிப் பயிலுநர்கள், கீழுழைப்புப் பட்டதாரிகளுக்குப் பட்டதாரி நியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ் விளம்பரப்படுத்தப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களில் மாகாணசபைகளுக்கு இடையில் வேறுபாடு இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக, வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் என்ற இருபது வகையான பதவிகளுக்கும் ரூபா 126,600 - 6x1560 - 8x3480 - 1‾1,120 (TB-2-5-2) என்ற சம்பளத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், மேல்மாகாண சபையினால் கோரப்பட்ட விண்ணப்பத்தில்,

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் போன்ற பதவிகளுக்கு ரூபா 133,080 - 1x2460 - 11x3480 - 173,820 (TB - 3-6) என்ற சம்பளத்திட்டமும் -

வரி உத்தியோகத்தர், உள்ளகக் கணக்காய்வாளர் போன்ற பதவிகளுக்கு ரூபா 135,3[illegible] - 4x2220 - 14x3480 - 192,960 (TB-1-[illegible]-1) என்ற சம்பளத்திட்டமும் -

சட்ட அலுவலருக்கு ரூபா 187,740 - 7x3780 - 214,200 (TB-5-5) என்ற சம்பள அளவுத் திட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளது - என்று பட்டதாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய மாகாணசபைகள் போன்று வடக்கு - கிழக்கு மாகாணசபை ஏற்கனவே பட்டியல் படுத்திய பதவிகளுக்கு மேலதிகமாக, முகாமைத்துவ உதவியாளர், வரி அலுவலர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் போன்ற பதவிகளுக்கும் விண்ணப்பங்களைக் கோர வேண்டும் என்றும் - சம்பந்தப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் கோரியுள்ளனர். (எ)

# பரந்தனில் காணிக் கச்சேரி

பரந்தன்,மார்ச்19

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரச காணிகளை மக்களுக்கு வழங்குவதற்கான காணிக் கச்சேரி இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்குப் பரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் காணிக் கச்சேரிக்கு வருகைதருவோர் தங்களின் காணிக்கோரிக்கைக் கடிதம், தங்களிடமுள்ள காணிபற்றிய ஆவணப்பிரதிகள், வருடாந்த குத்தகைப்பணம் செலுத்தாவிடின் குத்தகைப்பணம், காணிமாற்றம் எனின் அனைவரினதும் சம்மதக் கடிதமும் உறவு முறைக்கடிதங்கள் போன்றனவும் கொண்டுவருதல் வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (3-352-203)

# ஆழிப்பேரலை பாதித்த மாணவருக்கு விளையாட்டு உபகரணம், சைக்கிள்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் சைக்கிள்களும் வழங்கும் நிகழ்வு வடமராட்சி அரசியல் துறைப்பணிமனையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி பொருள்கள் வழங்கும் நிகழ்வு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலர் ச.செவந்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளான மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, குடத்தனை றோ.க.த.க. பாடசாலை, வல்வை சிவகுரு வித்தியாசாலை, வல்வை றோ.க. த.க. பாடசாலை, சென்.தோமஸ் றோ.க.த.க. பாடசாலை, கலட்டி றோ.க.த.க. பாடசாலை, அல்வாய் றோ.க.த.க. பாடசாலை என்பனவற்றுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட, வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மாணவியான செல்வி இராஜேஸ்வரி ரவிக்கு வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் பெண்களுக்கான சைக்கிள் ஒன்றை வழங்கினார். வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் வழங்கப்பட்ட பாடசாலைக்கான விளையாட்டு உபகரணங்களை சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களிடம் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா, வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் தயாளன், வடமராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பிரியன், வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் செவ்வந்திநாதன் ஆகியோர் வழங்கினர். (எ-70)

# மீனவர்களிடமிருந்து அடாத்தாக மீன்பறித்த படையினர் சிக்கினர்

காக்கைதீவுக் கடற்கரையில் தினமும் மீனவர்களிடம் மீன் பறிமுதல் செய்துவந்த படையினர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலக அதிகாரிகளிடம் மாட்டியிருக்கின்றனர்.

காக்கைதீவுக் கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பிடித்து வருகின்ற மீன் வகைகளில் ஒரு பகுதியை இராணுவத்தினர் அவர்களிடமிருந்து பலாத்காரமாகப் பெற்றுவந்தனர். இதுகுறித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக நேரில் உண்மையைக் கண்டறியும் நோக்குடன் மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் காலை காக்கைதீவுக் கடற்கரைக்குச் சென்றிருந்தனர்.

ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகரா தலைமையில் சென்ற குழுவினர் அங்கு மீனவர்களோடு மீனவர்களாக மறைந்து நின்று நிலைமையை அவதானித்தனர்.

அப்போது சிவில் உடையில் கடற்கரைக்கு வந்த படையினர் அங்கு வைத்து மீனவர்களிடம் இருந்த மீன் வகைகளைப் பறிமுதல் செய்துகொண்டிருந்தனர். உடனடியாக அவ்விடத்துக்குச் சென்ற ஆணைக்குழு அதிகாரிகள் படையினரைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விசாரித்தனர். இனிமேல் இதுபோன்ற மீறல்களில் ஈடுபடக்கூடாது என்று எச்சரித்தனர். (ஐ-13)

# லண்டன் 'தமிழினி' மஞ்சரி நடத்தும் கட்டுரைப் போட்டி

## இலங்கை மாணவர் கலந்துகொள்ளலாம்

லண்டன் தமிழினி மஞ்சரி நடத்தும் அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டியில் பாடசாலை மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பன்னிரண்டு வயதிற்குட்பட்ட மாணவர்கள், "சுனாமியால் ஐந்தறிவுப் பிராணிகள் உயிர் தப்பியதற்கும், ஆறறிவு படைத்தமனிதன் அதிகமாக அழிந்ததற்கும் காரணம் என்ன?" என்ற தலைப்பில் 300 சொற்களுக்குள் கட்டுரைகளை எழுதவேண்டும்.

பதின்மூன்று முதல் 15 வயது வரையான மாணவர்கள் 400 சொற்களுக்கு மேற்படாமல், 'சுனாமி அனர்த்தத்தைத் தவிர்க்க முடியாமல் போனது ஏன்?' என்ற தலைப்பிலும் -

பதினாறு முதல் பதினெட்டு வயது வரையானவர்கள் 750 சொற்களுக்கு மேற்படாமல் "உலக நாடுகளின் நிவாரணப் பணிகள் எதிர்காலத்திற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யும்" என்ற தலைப்பிலும் - கட்டுரை எழுதவேண்டும்.

இப்போட்டியில் பங்குபெறுவோர் தமது பெயர், முகவரி, பிறந்ததிகதி, பாடசாலையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னதாகக் கட்டுரையை அனுப்பிவைக்க வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதற்பரிசாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும், இரண்டாம் பரிசாக ஆயிரம் ரூபாவும், மூன்றாவது பரிசாக ஐந்நூறு ரூபாவும் வழங்கப்படுவதுடன் ஆறுதல் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மாணவர்கள் தங்கள் கட்டுரைகளை 'தமிழினி மஞ்சரி கட்டுரைப் போட்டி', 61, றொபட் குணவர்த்தன மாவத்தை, கிருலப்பனை, கொழும்பு - 06 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

சிறந்த கட்டுரைகள் நூல்வடிவம் பெறவுள்ளமையால் கட்டுரைகளுடன் சேர்த்து மாணவர்கள் தங்களது கடவுச் சீட்டளவு புகைபடப் பிரதி ஒன்றினை அனுப்பிவைப்பது விரும்பத்தக்கது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

# யாழ்.மரியன்னை பேராலயத்தில் தவக்கால புனித வாரச் சடங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்19

தவக்காலத்தின் புனித வாரச் சடங்குகளை யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை நடைபெறவுள்ள குருத்தோலை ஞாயிறு வழிபாட்டில் காலை 6.30 மணிக்கு ஆயர் தலைமையில் முதலாவது திருப்பலியும், காலை 8 மணி, பிற்பகல் 5.15 மணிக்கு 2ஆம், 3ஆம் திருப்பலிகளும் இடம்பெறும்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு குருக்கள் வாக்குறுதி புதுப்பித்தலும் திருத்தைலங்கள் மந்திரிக்கும் சடங்கும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இறுதி இராவுணவு ஞாபகார்த்த திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும். இரவு 10 மணி தொடக்கம் பொது ஆராதனை நடைபெறும்.

25ஆம் திகதி பெரிய வெள்ளி வழிபாட்டில் காலை 6.30 மணிக்குப் பேராலயத் திறந்த வெளியரங்கில் திருச்சிலுவைப்பாதைத் தியானம் நடைபெறும். மாலை 5 மணிக்கு திருச்சிலுவை ஆராதனையும் நற்கருணை விருந்தும் இடம்பெறும்.

26ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இயேசு திருச்சிலுவையில் மொழிந்த வாக்கியங்களின் தியானமும் இரவு 11 மணிக்கு பாஸ்கா திருவிழிப்பு ஆராதனையும், திருப்பலியும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பாஸ்கா ஞாயிறு வழிபாட்டில் காலை 5.30 மணிக்கு முதலாவது திருப்பலியும், காலை 6.30 மணிக்கு ஆயர் தலைமையில் இரண்டாவது திருப்பலியும் காலை 8.30 மணிக்கு மூன்றாவது திருப்பலியும் இடம்பெறும். அன்றைய தினம் மாலைத் திருப்பலி இடம்பெறமாட்டாது என பங்குத்தந்தை அருட்திருமைக்கல் சவுந்தரநாயகம் அறிவித்துள்ளார். (எ-202)

# ஓமந்தையில் யானை தாக்கியவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்19

மாடுகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் யானை தாக்கியதில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் ஓமந்தை பாலமோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 60 வயதுடைய - எட்டுப்பிள்ளைகளின் தந்தையான - கே.விஸ்வலிங்கம் என்பவரே காயமடைந்தவராவார்.

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் பட்டியில் நின்ற மாடுகளை மேய்ச்சலுக்காக வயலுக்கு சாய்த்துச்சென்றவேளை - அப்பகுதியில் நின்ற யானை ஒன்று இவரைத் தாக்கியதாகக் கூறப்பட்டது.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமாலை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டார். அவருக்கு அங்கு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. (ஐ-7)

# படகு திருத்தும் நிலையம் குடத்தனையிலும் திறப்பு

ஆழிப்பேரனர்த்தத்தினால் சேதமடைந்த மீன்பிடிப் படகுகளைத் திருத்தும் நிலையம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் வடமராட்சி குடத்தனை பொற்பதி கிராமத்தில் திறந்துவைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் இ.சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை யாழ் மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து நோர்வே 'ஏ.ஜே. பிஸ்சிங்' நிறுவன அனுசரணையுடன் தொழிற்படவுள்ள பொற்பதி மீன்பிடிப் படகு தி[illegible]த்தும் நிலையத்தை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித்திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன், வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், கடற்புலிகளின் பயிற்சி ஆசிரியர் கிருபா வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சுனாமி அனர்த்தத்தினால் சேத மடைந்த படகுகளைத் திருத்துவதற்காக யாழ். மாவட்டத்தில் தும்பளை, மாதகல், பொலிகண்டி ஆகிய இடங்களில் ஏற்கனவே நிலையங்கள் திறந் துவைக்கப்பட்டன. இது யாழ். மாவட்டத்தில் நான்காவது நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது. (த-173)

## வடக்கின் பெரும் போரில்

# முதல் இனிங்ஸில் சென்ரல் 157 ஓட்டங்களைப் பெற்றது

'வடக்கின் போர்' என அழைக்கப்படும் யாழ. மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் இரண்டாவது நாளான நேற்று மத்திய கல்லூரி அணியினர் தமது முதலாவது இனிங்ஸில் சகல விகெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் சுதர்சன் 29 ஓட்டங்களையும், ஷெல்ரன் 37 ஓட்டங்களையும், மகிபன் 27 ஓட்டங்களையும், மயூரன் 12 ஓட்டங்களையும் தமது அணிககாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான மதன்ராஜ் 16 ஓவர்களில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நிருபன் 13 ஓவர்களில் 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மயூரதன் 13.3 ஓவர்களில் 21 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் ஆட்டநேர முடிவின் போது 3 விக்கெட்டுக்களை இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். இறுதிநாள் ஆட்டம் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)

(த-190)

## எல்லைப்படை மாவீரர் கிண்ண உதைபந்தாட்டம்

# கரணவாய் மத்தி, விநாயகர் அணிகள் நேற்றைய ஆட்டங்களில் வெற்றி

வலி.வடக்கு,மார்ச்19

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும், உதயனின் அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகமும் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கரணவாய் மத்தி வி.கழகத்திற்கும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த மாவத்தை வி.கழகத்திற்கும் இடையேயான போட்டி சமநிலையில் முடிந்தது. பின்னர் சமநிலை உடைப்பு உதைமூலம் கரணவாய மத்தி வி.கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த விநாயகர் வி.கழகத்திற்கும் சென்.தோமஸ் வி.கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் 1:0 என்ற கோல்கணக்கில் விநாயகர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

(மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்)

(த-86)

# வலி.வடக்குப் பேரணிக் காட்சிகள்...



பேரணியில் சிறுவர்கள்...



கூட்டமைப்பு எம்.பிக்கள் முன்னே செல்ல...





பொலீஸாரோடு பெண்கள் வாக்குவாதம்...



ஆயத்த நிலையில் கலகம் அடக்கும் பொலீஸார்...



பதில் பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பு...

படங்கள்: நேசன்

## பேரணியில் யுவதியை மோதித் தள்ளினார் பொலீஸ் அலுவலர்

### பெண்கள் திரண்டு அதற்கு எதிர்ப்பு

தெல்லிப்பழை,மார்ச்19

தெல்லிப்பழையில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது யுவதி ஒருவரைப் பொலீஸார் ஒருவர் மோதித் தள்ளிய சம்பவத்துக்கு அங்கு திரண்டிருந்த பெண்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட பொலீஸாரைத் தங்கள் முன்கொண்டு வர வேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

பேரணியில் கலந்துகொண்டோர் பொலீஸ் நிலையத்தைத் தாண்டி உயர்பாதுகாப்பு வலயத்தை நோக்கிச் செல்ல முயன்ற போது பொலீஸார் அதைத் தடுத்து நிறுத்தினர். இதன் போது யுவதி ஒருவரை பொலீஸார் ஒருவர் நெருங்கி வந்து மோதித் தள்ளினார் என்றும் -

இதைத் தட்டிக்கேட்க முற்பட்ட அந்த யுவதியை அந்தப் பொலீஸ் உத்தியோகத்தர் ஆத்திரத்தோடு நெருங்கி மிரட்ட முற்பட்டார் என்றும் - கூறப்படுகிறது.

இந்த விடயத்தினால் கலவரமடைந்த பெண்கள் அங்கு நின்றிருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனிடம் முறையிட்டனர்.

அவர் உடனடியாகப் பொலீஸ் அதிகாரியோடு தொடர்பு கொண்டு சம்பவம் பற்றி எடுத்துக் கூறினார்.

சம்பந்தப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தரின் நடத்தையைக் கண்டித்த நாடாளுமன்ற உறுப்பினர், அவரை பகிரங்கமாக யுவதி முன்னிலையில் மன்னிப்புக் கோருமாறு கேட்டுக்கொண்டார். எனினும், குறிப்பிட்ட பொலீஸ் உத்தியோகத்தரை உடனடியாக இடமாற்றுவதாகப் பொலீஸ் அதிகாரி உறுதியளித்தார். ஆனால், அங்கு கூடியிருந்த பெண்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதுபோன்று பெண்களுடன் தவறான நடத்தைகளில் ஈடுபடும் பொலீஸார் மற்றும் படையினரை இடமாற்றிவிடுவதால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை என்று பொலீஸ் அதிகாரிக் எடுத்துக்கூறப்பட்டது. (ஐ-70-86-150)

## எங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்ப சகல வழிகளிலும் போராடுவோம்!

வலிவடக்கு,மார்ச்19

'நாம் எமது மண்ணில் மீளக்குடியேறி வாழ விரும்புகிறோம். அதைத் தடைசெய்யாதீர்கள். இந்தக் கோரிக்கைகளைப் புறக்கணித்தால் எங்கள் மண்ணில் சென்று குடியமர்வதற்காக அனைத்துவகைப் போராட்டங்களையும் முன்னெடுப்போம்; வெற்றிகாண்போம்.'

- இவ்வாறு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்திருக்கிறது யாழ்மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம்.

நேற்று வலி.வடக்கில் இடம்பெற்ற பேரணியின முடிவில் தெல்லிப்பழை பிரதேச செயலர் ஊடாக ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது அபிலாசைகளை முன்னிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் பொருத்தமான முன்மொழிவுகளை முன்வைத்தனர். இம்முன்மொழிவுகள் தங்களாலும், தங்களது அரசினாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. [illegible] பின்னரான உடனடி மனிதத் தேவை[illegible] கூட நடைமுறைப்படுத்தத் தாங்கள் [illegible]லை. மாறாக, உங்கள் ஆட்சிப் [illegible] காணப்படும் முரண்பாடுகளை[illegible] ஏற்கமுடியாத நொண்டிச் சாட்டுகளை[illegible] யதார்த்தத்திலிருந்து திசை திருப்பும் தந்திரோபாயமாகத் தாங்கள் கைக்கொள்கின்றீர்கள். தாங்கள் இறுகக் கண்களை மூடிக் கொண்டாலும், அனைத்துலகமும் விழிப்புடனேயே உள்ளது என்பதே வெளிப்படையான உண்மை.

ஸ்ரீலங்கா அரசியல் என்றுமே பேரினவாதக் கலாசாரத்தைக் கைவிடுமா? அது சாத்தியமா? என்ற கேள்விகள் எழுகின்றன. சமாதானத்தின் மீதான எமது பற்றுதலைத் தங்களது சமகாலச் செயற்பாடுகள் அரித்து வருகின்றன என்பது கவலைக்குரியது.

போர்நிறுத்த உடன்பாடு மூன்று ஆண்டுகளாக அமுலிலிருந்தும், இராணுவ நெருக்குவாரங்கள் குறையவில்லை. நிரந்தர சமாதானப்பாதையின் இடர்களை நீக்கத் தமிழீழ விடுதலைப் புலிகள் பல தடவை முயன்றும். ஸ்ரீலங்கா பேரினவாதச் சதிக்குள் மூழ்கியுள்ள நீங்கள் இத்தீவின் எதிர்காலத்தைக் குறித்துக் கவலையற்று, குறுகியகால சுயநல அரசியல் இலக்கை மட்டும் நோக்காகக் கொண்டு மீண்டும் ஒரு போருக்கான தயாரிப்புகளில் முனைப்புக் கொண்டுள்ளது கேடு மிக்கது.

நாம் உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் -

நாம் எமது மண்ணில் மீளக்குடியேறி வாழ விரும்புகிறோம், தடை செய்யாதீர்கள்!

எமது இந்தக் கோரிக்கைகள் சமூகநீதியின் பாற்பட்டவை; மனித உரிமைக்குரலின் வெளிப்பாடுகளாகும்.

இக்கோரிக்கைகளைப் புறக்கணிப்பீர்களாயின் நாம் எமது மண்ணில் மீளக்குடியேறுவதற்கு ஏற்ற அனைத்துவகைப் போராட்டங்களையும் முன்னெடுப்போம்; வெற்றி காண்போம்.

யாழ்.மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் அவல வாழ்நிலையைக் கொண்டு நலிவுறும் நாம், எமது வாழ்விடங்களுக்குச் செல்வதையும், எமது வாழ்க்கையை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளோம்.

அரசியல், இராணுவ, இராஜதந்திர வகைமுறைகளில் ஸ்ரீலங்காப் பேரினவாதம் தோல்வி கண்டுள்ளமையை அனைத்துலகமுமே அறியும். தமது அரசியல் வெற்றிக்காகவும், பதவிகளைத தக்கவைத்துக்கொள்ளவும், பேரினவாதக் கோட்பாட்டையே விடாப்பிடியாக - போட்டா போட்டியாக - ஸ்ரீ லங்கா அரசியலாளர் பற்றிப்பிடித்துள்ளனர். தாங்களும் அதே பதாகையின் கீழேயே நிற்கின்றீர்கள். எவ்வகையில் இத்தீவின் மேம்பாட்டுக்கு இந்நிலைப்பாடு உதவும் என்பது கேள்விக்குரியது.

நாம் எமது குடியிருப்புக்களுக்குத் திரும்பி எமது தொழில் முயற்சிகளை எவ்வித இராணுவ நெருக்குவாரமுமின்றி மேற்கொண்டு மகிழ்சசிகரமாக வாழவிரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-86-70)




## பிரதேச செயலக கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன

வலி.வடக்கு,மார்ச்19

நேற்று வலிவடக்கில் நடத்தப்பட்ட மக்கள் பேரணியின் போது தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. அங்கு நின்ற பூமரக்கன்றுகள் சிலவும் முறித்தெறியப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களில் சிலர் ஏற்பாட்டாளர்களின் கட்டுப்பாட்டை மீறி இந்தச் செயலில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-86)

## திருட்டுப்போன விக்கிரகங்கள் மீண்டும் ஆலயத்தில் பிரதிஷ்டை

தெல்லிப்பழை,மார்ச்19

சுமார் 7 மாதங்களுக்கு முன்னர் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து களவாடப்பட்டு பின் மீளக்கிடைக்கப் பெற்ற சமய நாற்குரவர்களினதும் ஐம்பொன் விக்கிரகங்கள் இன்று அதிகாலை மேற்படி ஆலயத்தில் மீளப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன.

ஏழு மாதங்களின் முன்பு மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து களவாடப்பட்ட சமய நாற்குரவர்களினதும் ஐம்பொன்னினாலான பிரசித்திபெற்ற சிலைகள் நான்கும் கொழும்பில் வைத்துப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே.

ஆலயத்திற்கு மீளக்கிடைக்கப்பெற்ற இவ் விக்கிரகங்கள் பிராயச்சித்த அபிஷேகத்துடன் இன்று அதிகாலை 5.30 மணிக்கு ஆலயத்தில் மீளப்பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.

சமயப்பிரமுகர்கள் மற்றும் அந்தணர்கள் எனப் பலரும் இந்த பிரதிஷ்டை நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-150)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 3 ஸ்ரீ XXX தொடர் இலக்கமுடைய Peugeot - 403 கார் விற்பனைக்குண்டு தொடர்பு: R.தேவராஜா, இல.188, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) (43229)

தரம் 6, தரம் 10 வகுப்புகளுக்கான கணிதப் பயிற்சி சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கம் பா.கிருபாகரன் (றோயல கல்லூரி ஆசிரியர்) (சி-41564)

Internet Leased Line அதற்குரிய உதிரிப் பாகங்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 0777 554528 (சி-41568)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். 1Kg 280/-.தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி, விஜயகுமார், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை T.P.: 222 3529, 222 2867 (42974)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43225)

புறொயிலர் 1Kg170/-, சுத்தம செய்தது. 1Kg 255/- விற்பனைக்குண்டு. கோழிக்குஞ்சுகளும் விற்பனை செய்யப்படும். New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K Farm, பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (43242)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg160/-, சுத்தம செய்ப்பட்ட புறொயிலர் இறைச்சி 1Kg 260/- தொடர்பு: S.சிவகுமாரன் கல்வியங்காட்டு சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (43264)

## தளபாடங்கள் தேவை

அலுவலக பாவனைக்கு உகந்த பாவித்த நல்ல நிலையில் உள்ள மேசை, அலுவலக கதிரை, அலுமாரி, மின்விசிறி என்பன தேவை. T.P.: 077 6284648 (43238)

## வீடு, காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி, கொழும்புத்துறை வீதியில், 133ஆம் இலக்கம் கொண்ட ஆறு (06) அறைகள், கார் கராஜ் உட்பட சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு, 4½ பரப்பு நிலத்துடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு காலை 9 மணி முதல் 5 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: 222 3146, 0777 149396, 077 6026907. (43263)

## வான் விற்பனைக்கு

253 - XXXX Dx113 மொடல் டொல்பின் ரக வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 134, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 5145. (43258)

நல்ல நிலையிலுள்ள 54 - டொல்பின் ரக வான் விற்பனைக்குண்டு. (Full 12 AC) தொடர்பு: 241, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி-41570)

## தவறிவிட்டது

யோன்பிள்ளை தவமணியின் தேசிய அடையாள அட்டை (486462761V), யோன்பிள்ளை மேரிறூபி நிலா என்பவரது தேசிய அடையாள அட்டை (836844114V), என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஞானப்பிரகாசம் வீதி, மல்வம் உடுவில், சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 0776914240 (43253)

பழனிவாசா நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறையை சேர்ந்த சுப்பிரமணியம் ஆறுமுகம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.352171735V) சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் சில முக்கிய ஆவணங்கள் என்பன 16-03-2005 புதன்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். (43237)

துன்னாலை மத்தியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பத்மகாந்தன் என்பவருடைய N.I.C. (630270650V) விசேட அடையாள அட்டை, தொழில் அறிமுகஅட்டை என்பன 03.03.2005 அன்று உடுவிலில் நடைபெற்ற வாகன விபத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.(43265)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0777 - 593722 (42296)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976 ஆம் ஆண்டு, புனர்பூசம் 3ஆம் பாதம், கிரகபாவம் 24 உடைய மணமகனுக்கு U.K., கனடா P.R உள்ள மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2532, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (43252)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974இல் பிறந்த, மிதுனலக்கினம், அனுசம் 2ஆம் பாதம், கிரகபாவம் 37½ செவ்வாய் தோஷமற்ற A/L.படித்த சைவபோஷண மணமகனுக்கு உள்நாடு அல்லது வெளிநாடு P.R. உடைய மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். ப.சிவலிங்கம், 78/7C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (43240)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய வடபகுதியில் அரச நிர்வாகப் பதவி வகிக்கும் கார்த்திகை நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2524, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (43016)

1972 இல் பிறந்த இந்து கௌரவ சுயதொழில் செய்யும் மணமகளுக்கு உத்தியோகம் பார்க்கும் 7இல் செவ்வாய் உள்ள வரன் தேவை முழுவிவரத்துடன் தொடர்பு கொள்ள: விளம்பர இலக்கம் 2531, உதயன், யாழ்ப்பாணம். (43201)


**இரும்புப் பெட்டிகள் பழுதுபார்த்தல்**

சகலவிதமான பழுதுகளைக் கொண்ட இரும்புப் பெட்டிகளும (IRON SAFE) சிறந்த முறையில் திருத்தியமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
இல.13, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் (43255)
(21-32-15-16)


## வரவேற்புபசாரம்

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஆளுநர் வரவேற்பு விழா இன்று சனிக்கிழமை 11.30 மணிக்கு உடுவிலில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கழக '306பி' ஆளுநர் லயன் எஸ். சிவானந்தன், லயன் சீமாட்டி விஜயலக்ஷ்மி ஆகியோருக்கே இந்த வரவேற்பு உபசாரம் நடைபெறவுள்ளது. (ஐ-202)

## கீரிமலை-பண்டத்தரிப்பு வீதி சேதம்

இளவாலை,மார்ச்19

கீரிமலை-பண்டத்தரிப்பு வீதி சித்திரமேழிப் பகுதியில் இருந்து பண்டத்தரிப்பு வரை பலத்த சேதமடைந்துள்ளது. இதனால், அந்த வீதியில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி குன்றும், குழியுமாகக் காணப்படுவதால வீதி விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதி அடிக்கடி திருத்தப்படுகின்ற போதிலும் மீண்டும் பழைய நிலையை அடைந்து விடுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-48-203)


SKY COMPUTER SYSTEM
No. 109, Kandy Road,
Chundikuli, Jaffna.
விற்பனைக்குண்டு
10 GB Hard Disk
128 MB RAM
25,500/-
500MHZ IBM Computer with Multimedia
ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited Soft ware & free dust cover
15" Monitor - 6,500/-
கச்சேரிக்கு அருகில்



**Computer Courses**

மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
Diploma in Microsoft Office - 1,800/=
Diploma in Desktop Publishing - 1,800/=
**One Month Course**
ஆரம்பம் 22.03.2005
18.04.2005 வரை மட்டுப்படுத்தப்பட்ட விசேட பயிற்சிநெறி
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் மட்டுமே!
பதிவுகளுக்கு முந்துங்கள்!

NE-Tech
No.34.,Saddanathar Road,
Nallur, Jaffna.

தொடர்புகளுக்கு:
Course Director.
T.P.: 021 222 3786
0777-708498.
(சி-41566)(42-21-15-16)


# மரண அறிவித்தல்



## சரவணமுத்து கந்தையா (செல்வராசா)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தையா (செல்வராசா) அவர்கள் 15.03.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அனனார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஸ்ரீரஞ்சினி (கனடா), ஸ்ரீபாமினி, தவேந்திரன் (ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரன் (கனடா), செல்வகுமார் (எழுதுவினைஞர், யாழ். பல்கலைக்கழகம்), ரஜனி (ஜேர்மனி), பொன்மதிச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நாகரத்தினம் (மோனை), மகாலஷ்சுமி, மனோன்மணி, இரெத்தினசிங்கம், பூபாலசிங்கம், இராசப்பா (நிலஅளவையாளர், கொழும்பு), ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மநாதன், பாலசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கௌதமி, ஜெனித்தா, ஐங்கரன், பானுகோபன், சௌமின், தேனுப்பிரியா, துஷாந், தவப்பிரியன், லாவண்யா, கிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் பிரபாகரன் (யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயந்தி (ஆசிரியர்), சசிதரன், ஜெயவாணி ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஜெயந்தினி, கார்த்திகா, பிரியா, நிருபா, சறோ, செல்வாநந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20-03-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.செல்வகுமார் (மருமகன்).

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.*
(43259)(21-16-15)

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்**

**உயர்தர மாணவர் ஒன்றியம்**
**ஒன்றுகூடல்**

காலம் : - இன்று (19.03.2005) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி

பிரதம விருந்தினர் :-
ஸ்கந்தாவின் மைந்தன் வைத்தியகலாநிதி -
க.தேவகாந்தன் தம்பதிகள்
(NEPHROLOGIST-FLORIDA, U.S.A)

சிறப்புவிருந்தினர்:- ஸ்கந்தாவின் மைந்தன்
திருமிகு.சுப்பிரமணியம் தேவராஜா
[ஜேர்மனி]

ஆசி வழங்குபவர்:- எங்கள் தந்தை திருமிகு.க.சிவாஜி
[அதிபர்]

அன்புடன் அழைக்கின்றோம்.

உயர்தர மாணவர் ஒன்றியம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

(43256)
(21-32-16-15)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
24 — 06 — 1942



உதிர்வு
17 — 03 — 1997

**அமரர் செல்லையா சீவரத்தினம் (கிளி)**

*(முன்னாள் ஊழியர் - இ.போ.ச)*
*திதி: 19.03.2005*

இறையெய்தி எட்டாண்டுகள் அகன்றது
எங்கள் இதயத் தெய்வமே!
"அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்கள்
இன்று எம்முடன் மறைந்தும் வாழ்கின்றீர்கள்"

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார், உறவினர்கள்.

உரும்பிராய் வடக்கு.
(43251)(42-21-16-15)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# ஊடகச் சுதந்திரத்துக்கு ஊறு விளைவிக்கும் ஏற்பாடு!

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்த பல புதிய, புதிய ஒழுங்குவிதிகளை அரசு கொண்டுவந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளைக் கவனிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் வழி செய்யும் சட்டமூலங்களைக் கொண்டுவருவது குறித்தும் அரச உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் புதிய கட்டுப்பாடுகள், ஏற்பாடுகள் ஊடக சுதந்திரத்துக்கான சாவுமணி என்று பல தரப்பினராலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டுமானம், நிவாரணம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய செய்திகளைச் சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் மீதே அரசு இந்தப் புதிய கட்டுப்பாடுகளை, ஒழுங்கு விதிகளைத் திணிக்க முயல்கின்றது.

இதன்படி, வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு ஆழிப்பேரலை அனர்த்த விடயங்கள் தொடர்பான செய்தி, விவரணச் சித்திரம் போன்றவற்றைத் தயாரிப்பதற்காக வரவிரும்பும் ஊடகவியலாளர்கள் இலங்கைக்குப் புறப்பட முன்னர் தத்தமது நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளவேண்டும். இலங்கையில் தான் தயாரிக்கும் செய்திகள், விவரணங்கள் தொடர்பான விடயத்தை இலங்கையிலும், சம்பந்தப்பட்ட தூதரகத்திலும் சமர்ப்பித்து உரிய அதிகாரிகளிடம் அனுமதிபெற்ற பின்னரே - அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையத் திருத்தங்கள், மாற்றங்கள் செய்த பின்னரே - அவற்றைப் பிரசுரிக்கவோ, திரையிடவோ வேண்டும். இந்த விதிமுறையை ஏற்று உடன்படிக்கையில் ஒப்பமிடுவோர் மட்டுமே இலங்கையில் செய்திகளைச் சேகரிக்க அனுமதிக்கப்படுவர் என்ற கட்டுப்பாடே இப்போது திணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத கட்டுப்பாடுகள் என சுதந்திர ஊடக இயக்கம் கண்டித்திருக்கின்றது.

இந்த விதிமுறைகள் அல்லது கட்டுப்பாடுகள், சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக சுதந்திரத்தின் தராதரங்களையும், நடைமுறைகளையும் அத்தோடு, சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தினால் வழங்கப்பட்டுள்ள கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும், சுயாதீனமாகத் தகவல்களை அறிந்துகொள்ளும் பொதுமக்களின் உரிமைகளையும் பறிக்கும் ஏற்பாடாகவே அமைந்திருக்கின்றன என்றும் சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கை அரசமைப்பின் கீழ் நாட்டின் பிரஜை ஒவ்வொருவருக்கும் - அதேவேளை, மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் - உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளில் அநாவசியமாக - முறையற்ற விதத்தில் - தலையீடு செய்வனவாகவும் இந்த விதிமுறைகள் அமைந்திருக்கின்றன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுள் இலங்கையும் ஒன்று. இந்த அழிவுகளிலிருந்து நாட்டையும், மக்களையும் மீட்பது என்பது தனித்து இலங்கை அரசினாலோ அல்லது இலங்கை மக்களினாலோ இயலக்கூடிய காரியம் அல்ல. சர்வதேச நிறுவனங்கள், உதவும் நாடுகள், சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் எனப் பல தரப்பினரினதும் உதவி, ஒத்தாசைகளோடுதான் இந்த அனர்த்த அழிவுகளிலிருந்து நாட்டையும், மக்களையும் காப்பாற்றி, மீளத்தூக்கிவிடமுடியும்; வழமை நிலையை ஏற்படுத்தமுடியும் என்பது நாமறிந்ததே.

இதனால்தான், ஆழிப்பேரலை அழிவிலிருந்து நாட்டையும், மக்களையும் மீட்பதற்குச் சர்வதேச உதவியை இருகரம் விரித்து ஜனாதிபதியும், அரசுத் தலைவர்களும் இறைஞ்சிக் கோரினர்.

சர்வதேச நிதியுதவி ஐந்து சதமேனும் கிடைக்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது கூறுவது ஒருபுறமிருக்க, இவ்வாறு சர்வதேச உதவியைக் கோரியுள்ள ஒரு நாடு, அது தொடர்பான சுயாதீனச் செய்திகள் வெளியாவதைக் கட்டுப்படுத்தி, அதில் தலையிடுவதைச் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளுமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளுக்கும், நிவாரணத்துக்கும் உதவி அளிக்கும் சர்வதேச சமூகம், அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாங்கு குறித்துக் கட்டுப்பாடின்றி - சுயாதீனமாக - சுதந்திரமாக - அறிந்து கொள்ளும் உரிமையும் உடையது என்பதை இலங்கை அரசு மறுப்பது - மறப்பது - விசித்திரமானதாகும்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்காகத் தனது பையிலிருந்து ஒவ்வொரு சதத்தை - ஒவ்வொரு 'பென்னி'யை - வழங்கிய ஒவ்வொருவரும் அந்த அனர்த்த நிவாரணப்பணி குறித்துச் சரியான - தெளிவான - சுயாதீனமான - கட்டுப்பாடில்லாத - தணிக்கை செய்யப்படாத - செய்திகளை அறிந்து கொள்ள உரிமையும் சுதந்திரமும் உடையவராவர். அதை மறுக்காமல் அதற்கு இடமளிப்பது அந்த ஆள்களின் உதவியைக் கைநீட்டிப் பெற்றுக்கொண்ட - பெற்றுக்கொள்ள இருக்கும் - தரப்புகளின் கட்டுப்பாடும் பொறுப்புமாகும்.

இதனை, ஊடகவியல் சுதந்திரத்தில் அத்துமீறி - அளவு மீறி - எல்லைதாண்டி - வரையறை கடந்து - தலையிட முயற்சிப்போர் கருத்திற்கொள்வது நல்லது.

# இடம்பெயர்ந்தோரின் அவலத்தை நீக்குவதே சமாதானத்துக்கான பாதையைத் தெளிவாக்கும்

## வலி.வடக்கு அமைப்புகள் ஜனாதிபதிக்கு மகஜர்

வலி.வடக்கு,மார்ச்19

இடம்பெயர்ந்த மக்களின் மனித அவலத்துக்குத் தீர்வுகண்டால்தான் நீடித்த சமாதானத்துக்கான பாதை தெளிவாகும்.

- இப்படித் தெரிவித்திருக்கின்றது வலி.வடக்குப் பொது அமைப்புகளின் ஒன்றியம்.

நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மகஜரின் முழுவிவரமும் வருமாறு:-

வலிகாமம்வடக்குப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து அல்லலுறும் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும், எமது மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் இப்பேரணியின் முடிவில் இம் மகஜரைச் சமர்ப்பிக்கின்றோம்.

எவ்வித மனிதநேய விட்டுக்கொடுப்பும் இன்றி வெறித்தனமான ஸ்ரீலங்காப் பேரினவாதமானது எம்மீது போரினைத் திணித்துள்ளது. அதன் விளைவாகவே நமது வாழ்விடங்களில் இருந்து ஸ்ரீலங்காப் படைகளால் துரத்தப்பட்டதை அனைத்துலகும் அறியும். இடம்பெயர் வாழ்க்கை எனும் மனித அவலம் தொடர்கதையாகிவிட்டது.

நாம் தொழில் புரிந்த கடலை, எமது விளைநிலங்களை, குடியிருப்புகளை, பாடசாலைகளை, தேவாலயங்களை, தொழிற்சாலைகளை உயர்பாதுகாப்பு வலயங்கள் விழுங்கிவிட்டன. எனவேதான், தங்களது ஸ்ரீலங்காப் படைகளை ஆக்கிரமிப்புப் படைகளாகக் கணிக்கின்றோம்.

போர்நிறுத்த உடன்படிக்கை கடந்த 3 வருடங்களாக அமுலிலிருந்தும் இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்கின்றன. சமாதான முன்னெடுப்புகள் நடைதளர்ந்து ஸ்தம்பிதம் அடைந்துவிட்டன. சமாதானத்தின் மீதான நம்பிக்கை சரிந்து வருகிறது. உண்மையிலே சமாதானத்தை உருவாக்குவதில் தாங்கள் அக்கறை கொண்டிருந்தால் -

★ இடம் பெயர்ந்தோர் தமது பிரதேசங்களில் மீள்குடியேறுதல் -

★ இயல்பு வாழ்நிலைக்குத் திரும்புதல்-

★ தமிழ்மக்கள் அடிப்படை மனித உரிமைகளை அனுபவிப்பதோடு, மேம்பாடு காணப் பொருத்தமான அரசியல், சமூக, பொருளாதார முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் துணிச்சலான இதய சுத்தியுடனான அணுகுமுறையை மேற்கொள்ளுதல்-

என்பன தங்களது அரசியல் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறவேண்டும். இவற்றைத் திட்டமிடுவதற்கும், அமுல்படுத்துவதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் பொருத்தமான - நடைமுறைச் சாத்தியத்துடனான - முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாகத் தங்களை உள்ளடக்கிய ஸ்ரீலங்கா அரசியலோ தமிழின அழிப்பைக் குறிக்கோளாகக் கொண்டமையால் அவர்களது முன்மொழிவுகள் இழுத்தடிக்கப்படுகின்றன. அல்லது புறக்கணிக்கப்படுகின்றன. வேதனைக்குரிய விடயம் என்னவெனில் தாங்களும் பேரினவாதச் செயற்பாடுகளுக்குத் துணை போவதுடன், முனைப்பாகச் செயற்படுவதும் தான் என்பதாகும்.

எமது இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுமே நிரந்தர, நீடித்த சமாதானத்திற்கான ஒரே வழிப்பாதையாகும். போரினால் மட்டுமன்றி, அண்மைய சுனாமிப் பேரலையினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது அபிலாசைகள் புறந்தள்ளப்படுமாயின் எமக்கு முன்னேயுள்ள தவிர்க்க முடியாத தெரிவாகிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், எமக்கென்று ஒரு தேசத்தை உருவாக்கும் வல்லமையைப் பலவழிகளிலும் கொண்டுள்ள நாம் அப்பாதையிலே தொடர்ந்து செல்வோம் என்பதைத் தங்களுக்கு அறியத்தருவதில் பெருமை கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-70-86)

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய

# 'போரும் சமாதானமும்' நூல் பல்கலையில் இன்று அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச்19




தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை யரங்கில் நடைபெறவுள்ளது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த இ.புவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசும், சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி.கணேசலிங்கம், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொள்வர். (எ-202)

# நல்லினத் தோடங் கன்றுகள் புளித்தோடையாக மாறியதால் ஏமாற்றம்

வலி.வடக்கு,மார்ச்19

நல்ல இனத் தோடங்கன்று என்று வாங்கி நட்டுப் பராமரித்த விவசாயிகள் அவை புளித் தோடையாக (நாரத்தையாக) தரங்குறைந்த தோடை மரங்களாக மாறியது கண்டு ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இது நடந்தது வலி.தெற்குப் பகுதியில். ஏமாற்றமடைந்த விவசாயிகளின் பிரதி நிதி ஒருவர் நாரத்தைப் பழங்களை பிர தேச விவசாயக் குழுக் கூட்டத்துக்கு எடுத்து வந்து காட்டினார்.

வலி.தெற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் சி.திருவாகரன் தலைமையில் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, உடுவில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பவநீதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இணுவில் பிரதேச விவசாய சம்மேளனப் பிரதிநிதியே தோடங்கன்றுக்குப் பதிலாக நாரத்தங்கன்று வழங்கப்பட்டதையும் அதில் காய்த்த காயையும் கூட்டம் இடம் பெற்ற இடத்திற்குக் கொண்டுவந்து காட்டினார். விவசாயிகள் ஏமாற்றப்பட்டதை விளக்கிக் கூறினார்.

இடம்பெயர்வைத் தொடர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கு விவசாயத்திணைக் களத்தால் நல்ல இனத் தோடங்கன்று என்று கூறி பழச் செய்கை உற்பத்திக்காக வழங்கப்பட்ட கன்றே நாரந்தங்கன்றுகளாக மாறியுள்ளனவாம். (ஐ-68-152)

## உதயவாக்கு

வாழ்க்கையில் சிறந்த செயல் எது தெரியுமா? தொலைவில் மங்கலாகத் தெரிவதைத் தொல்லைப்பட்டுப் பார்க்க முயற்சிப்பதை விட்டு கையிலிருப்பதை உடனடியாகச் செய்து முடிப்பதுதான்.

- கார்லைல்.

## நாளை

பங்குனி 07
ஞாயிற்றுக்கிழமை
20.03.2005
திதி : தசமி
முன் இரவு 8.16 வரை
நட்சத்திரம் : புனர்பூசம்
பிற்பகல் 2.31 வரை
சுபநேரம் : 9.17 - 10.47
ராகுகாலம் : 4.47 - 6.17
(யாவும் பழைய நேரப்படி)

# ஊர்காவற்றுறை வர்த்தக நிலையங்களில் காலாவதியான மென்பானம் விற்பனை

யாழ்ப்பாணம்,மார்ச்19

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் உணவகங்களிலும் காலாவதியான மென்பான வகைகள் விற்பனை செய்யப்பட்டுவருவதாக நீதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

இது விடயமாக விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஊர்காவற்றுறையில் இயங்கும் உணவகங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் காலாவதியான மென்பானங்கள் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டதை நாம் இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வாறு, காலாவதியான மென்பானங்களின் விற்பனை நுகர்வோருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். எனவே, இவ்வாறான மென்பானங்களின் விற்பனையில் வர்த்தகர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

எனவே, மென்பானங்களைக் கொள்வனவு செய்வோரும், இறுதிப் பாவனையாளர்களான நுகர்வோரும் காலாவதித் திகதியை பார்வையிட்டு மென்பானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்-

- இவ்வாறு முன்னெச்சரிக்கையுடன் செயற்படும் சமயத்தில் உடல்நலக்கேடு ஏற்படுவதில் இருந்து விலகிக்கொள்ள முடியும் - என்று அதில் உள்ளது.

(எ)

## யாழ். - கல்லுண்டாய்ப் பிரதான வீதியில்

# வயல்களின் வளம்கருதி நடுகை செய்த கருவேலம் மரங்கள் விறகுக்காக அழிப்பு

நவாலி,மார்ச்19

காக்கைதீவு கடற்கரையோரம் - யாழ். கல்லுண்டாய் பிரதான வீதியோரங்களில் நடப்பட்ட கருவேலம் மரங்கள் விறகுக்காகத் தறிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கல்லுண்டாய்ப் பகுதி வயல் நிலங்களுக்குள் புகும் கடல் நீரின் உவர்த்தன்மையை உறிஞ்சும் பொருட்டு பல வருடங்களுக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் இணைந்து இந்த மரங்களை நாட்டியிருந்தனர்.

தற்போது இந்தக் கருவேலம் மரங்கள் வளர்ந்து பெருவிருட்சமாகியுள்ளன. இதனைத் தமக்குச் சாதகமாகக் கொண்ட சிலர் தமது பதைரப்பட்ட தேவைகளின் நிமிர்த்தம் இவற்றைத் தறித்து எடுத்துச் செல்கின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகளால் கருவேலம் மரங்கள் விரைவில் முற்றாக அழிந்துவிடக்கூடிய அபாயநிலை உண்டாகி வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் கருவேலம் மரங்களைப் பேணிப் பாதுகாக்க முன்வந்தால் வீதியால் செல்லும் மக்கள் வெயில் காலத்தில் இளைப்பாறிச் செல்லக் கூடியவாறு இருக்கும் எனவும் - கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (எ-100)

# ஜே.வி.பி. அமைச்சர் நட்ட அடிக்கல் சீறும்படையால் கொத்தி அகற்றப்பட்டது

## அம்பாறை கோமாரிப் பகுதியில் சம்பவம்

காரைதீவு,மார்ச்19

அம்பாறை மாவட்டத்திலுள்ள கோமாரியில் கடந்த 19-02-2005 இல் ஜே.வி.பி. அமைச்சரொருவரால் நடுகைசெய்யப்பட்ட அடிக்கல் கொத்தி எறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த சனியன்று இடம்பெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.-

அடிக்கல் நடப்பட்ட இடத்தில் 'சீறும்படை' என அடிக்குறிப்பிட்டு எச்சரிக்கைப் பிரசுரமொன்றும் ஒட்டப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

மீனவர்களுக்கு 30 ஆயிரம் வீடுகளை அமைக்கும் கடற்றொழில் அமைச்சின் திட்டத்தின் கீழ் கோமாரித் தமிழ்க் கிராமத்திலும் வீடமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கான அடிக்கல் நடும் விழா 19-02-2005 அன்று நடைபெற்றது. 'எழுவோம், ஒன்றுபடுவோம், அலைகளை வெல்வோம்' என்று மகுடமிட்டு அந்த அடிக்கல்லுக்கான நினைவுக்கல் நடப்பட்டது.

அதில் கடந்த 26-12-2004 இல் இடம்பெற்ற கடற்கோள் அனர்த்தம் காரணமாக வீடுகளையிழந்த மீனவர் சமூகத்திற்கு வீடுகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக அம்பாறை மாவட்ட எம்.பி. வசந்த பியதிஸ்ஸவின் அழைப்பிலும் - அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் பங்களிப்பிலும் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேன வியசிங்காவினால் 19-02-2005 அன்று முற்பகல் 10.00 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்கல் கொத்தி எறியப்பட்டுள்ளதுடன், அதற்குத் தாரும் பூசப்பட்டுள்ளது. அதன் கீழ் 'சீறும் படை' என மகுடமிட்டு ஓர் எச்சரிக்கைப் பிரசுரமொன்றும் ஒட்டப்பட்டிருந்தது.

அதேவேளை, அமைச்சரின் வருகையையொட்டிய பதாதைகளும் அறுத்து வீசப்பட்டிருந்தன. 6 மாதங்களுள் 12.5 மில்லியன் ரூபா செலவில் 30 ஆயிரம் வீடுகள்', 'கடற்றொழிலைக் கட்டியெழுப்புவோம்' என்றெல்லாம் எழுதப்பட்டிருந்த பல சிவப்புநிறப் பதாதைகள் அறுத்தெறியப்பட்டிருந்தன. (எ-84)




றோட்டறியின் நூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் நடத்தப்பட்ட வினா - விடைப் போட்டியில் நகர்மைய அணி, நல்லூர் றோட்டறக்ட் கழக அணி ஆகியன பங்குபற்றியபோது எடுக்கப்பட்ட படம். (ப-203)

# பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தில் இலவச இலத்திரனியல் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்19

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் பெண்களுக்கு இலவச இலத்திரனியல் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் இணைந்து கற்க விரும்பும் பெண்களிடமிருந்து விண்ணப்பங்களையும் அந்த அமைப்புக் கோரியுள்ளது.

இலவசமாக வழங்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் 20 வயதிற்குட்பட்ட பெண்கள் இணைந்து கொள்ளமுடியும்.

பயிற்சி நெறியில் இணைந்து கற்க விரும்பும் பெண்கள் சுண்டிக்குளி பேரின்பநாயகம் வீதியிலுள்ள பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிலையத்திற்குச் சமுகந்தந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-204)

## மிளகாய் செய்கையில் நோய்த் தாக்கம்

வலி.தென்மேற்கு,மார்ச்19

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்டுள்ள மிளகாய்ச்செடிகளின் இலைகள் சுருண்டு முருடு நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், இம்மிளகாய்ச்செடிகளின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.(த-135)

## மலசலகூட வசதி இல்லை

வலி.தென்மேற்கு,மார்ச்19

பண்டதரிப்பு சென்மேரிஸ் முன்பள்ளி மாணவர்களுக்கு மலசலகூடம், குடிதண்ணீர் வசதி இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த முன்பள்ளிக் காணியில் குழாய்க் கிணறு ஒன்றை நிறுவித்தருமாறு பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ-135)

## நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி,மார்ச்19

வரணி மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ள சிகையலங்காரம் மற்றும் கேக் ஐசிங் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களை நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (எ-117-204)

# சுனாமிபாதித்த பதினைந்து மாணவர்கள் அந்தோனியார் கல்லூரியில் இணைப்பு

ஊர்காவற்றுறை. மார்ச்19

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட 15மாணவர்கள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தமது கல்வியினைத் தொடர்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன். இந்த மாணவர்கள் மேற்படி கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து கல்வி உட்பட அனைத்துச் செயற்பாடுகளிலும் ஈபடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

கல்லூரி நிர்வாகத்தினால் இந்த ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும்-

இவர்களுக்கான சகல உதவிகளையும் கியூடெக் நிலையம் வழங்கிவருவதாகவும்- கல்லூரியின் பழையமாணவர் சங்கச் செயலாளர் என்.தர்மராஜா தெரிவித்தார் .

இந்த மாணவர்கள் பாதிக்கப்பட்ட சூழலில் இருந்தும். அகதிமுகாம் வாழ்க்கையில் இருந்தும் விலகியிருப்பதால் அவர்களின் மனங்களில் உள்ள அச்ச உணர்வுகள் படிப்படியாக நீங்கி கல்வியில் ஆர்வம் காட்ட முற்படுவர் என்றும்-

இவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டும் வகையில் அவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளையும் பழையமாணவர் சங்கத்தினர் மேற்கொள்ளவுள்ளனர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-16-203)

# வாசகர் திருமுகம்

## மாலைவேளை உசன் செல்வோர் பஸ் சேவை இன்றி அந்தரிப்பு

ஏ-9 வீதியில், உசன் பகுதிக்கான பஸ் சேவை சீரின்மையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம்.

குறிப்பாக, மாலை 6.45 - 8.15 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நடைபெற்றுவந்த உசன் பகுதிக்கான இரு பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், வேலைத் தளங்களுக்குச் சென்று திரும்பும் பணியாளர்கள் பெரிதும் பாதிப்படையவேண்டியுள்ளது.

இந்த பஸ் சேவை மூலம் உசன், மிருசுவில், விடத்தற்பளைப் பகுதி மக்களே பயணத்தை மேற்கொள்கின்றனர். இச்சேவை நிறுத்தப்பட்டதால் கொடிகாமத்திற்கான பஸ் சேவையிலேயே அவர்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

இச்சேவை கொடிகாமத்துடன் இடைநிறுத்தப்படுவதால் அங்கிருந்து வேறு வாகனங்களில் தமது பகுதிகளுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, உரியவர்கள் கவனம் எடுத்து பயணிகளின் சிரமங்களைக் குறைக்க ஆவன செய்வார்களா?

★ கொடிகாமம் வரையான பஸ் சேவை மூலம் பயணிக்கும் பெண் பயணிகள் மிகவும சிரமங்களை அனுபவிப்பது குறிப்பிடத்தக்கது.

பஸ் சேவை சீரில்லாமையால் இடைநடுவில் நிற்கும் பெண்கள் ஓட்டோ போன்ற வாகனங்களிலேயே பயணிக்கும் நிலை அண்மைய நாள்களாகத் தொடர்ந்தபடி உள்ளது.

உசன். பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சுதா

## ஆவரங்கால் மேற்கு ச.ச. நிலையம் வாசகர் திருமுகத்துக்கு விளக்கம்

கடந்த 25-03-2005 ஆம் திகதி 'உதயனில்' 'கலாசாரச் சீரகேட்டினைக் கவனிப்பார் யாரோ? என்ற தலைப்பில் வெளியாகிய வாசகர் திருமுகத்தில் குறிப்பிட்டிருப்பது போல ஆவரங்கால் கிராமத்தில் கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறவில்லை.

எமது சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை நடைபெறுவதில்லை என்பதனையும் இத்தகவலை 'உதயன்' பத்திரிகைக்கு வழங்கிய சர்வோதய வீதியைச் சேர்ந்த நலன்விரும்பி எமது சனசமூக நிலையத்திற்கு எவ்வித தகவலும் இதுவரை தராது 'உதயன்' பத்திரிகைக்கு 'சமூக நலன்களில் அக்கறை கொண்டு செயற்படவேண்டிய இரண்டு சனசமூக நிலையங்கள் உள்ளன' எனக்குறிப்பிட்டது எமக்கு வேதனை அளிக்கிறது. எமது சனசமூக நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் எவ்வித சட்டவிரோத மதுபான நிலையமும் இயங்கவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

மு.பரமசிங்காரம்
செயலாளர்.

அ.சிங்கராசா
தலைவர்.

சர்வோதய சனசமூக நிலையம்,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

## உலர் உணவு கொடுப்பனவில் தெளிவின்மை: அதிகாரிகள் தெளிவுபடுத்துவார்களா?

வடமராட்சி கிழக்குப் பிரதேசம் கடந்த 26-12-2004 அன்று சுனாமி அனர்த்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. இதன் காரணமாக எமது பகுதிகளுக்கு அரசினால் உலர் உணவு முத்திரை வழங்கப்பட்டது. இதில் ஒருவருக்குக் கிழமை ஒன்றுக்கு 375 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. அதில் 6 கிழமைக்கான உலர் உணவு வெட்டப்பட்டுள்ளது. அதாவது, 2,250 ரூபா ஒருவருக்கு வெட்டப்பட்டுள்ளது. அதேவேளை, 200 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும் என்று முதலில் அறிவிக்கப்பட்டபோதும், தற்போது அத்தொகை நிறுத்தப்பட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அத்தொகைக்குச் சமனான பொருள்களை வாங்கும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிவாரண வெட்டானது அரசின் செயற்பாடா? அல்லது அரச அதிபரின் செயற்பாடா? அல்லது உதவி அரச அதிபரின், கிராம அலுவலர்களின் செயற்பாடா? என்பதை அரச அதிபர் பத்திரிகை வாயிலாகப் பொது மக்களுக்கு அறியத்தருவாரா?

உடுத்துறை. ம.நிலவன்

## இரவில் மட்டும் இயங்க மறுக்கும் தொலைபேசிகள்

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்திவரும் நான், இந்தத் தொலைபேசி சேவையில் அண்மைக்காலமாகக் காணப்படுகின்ற குறைபாடு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனது தொலைபேசி கடந்த சில மாதங்களாக இரவில் செயற்படாது உள்ளது. நள்ளிரவு தாண்டியும் காலைவரை தொலைபேசியில் அழைப்புகளை எடுக்கமுடியாமல் உள்ளது. உள வரும் அழைப்புகள் கிடைக்கின்றன. ஆனால், 'டயல்' செய்வதற்கு முடியவில்லை. 'டயல்' செய்வதற்கான ஓசை இல்லாமல் போய்விடுகிறது. இது ஏன்? இதுபற்றி வேறு தெரிந்த தொலைபேசிப் பாவனையாளர்களுடன் தொடர்புகொண்டு கேட்டேன். அவர்களும் இதேபோன்ற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். குறிப்பிட்ட இலக்கங்களில் இருந்து ஆரம்பிக்கும் இலக்கத் தொலைபேசிகளுக்கே அடிக்கடி இப்படி இடம்பெறுவதாக ரெலிகொம் உத்தியோகத்தர்கள் கூறுவதாக ஒருவர் சொன்னார்.

அண்மையில் புதிய பரிவர்த்தனைக் கோபுரங்களைத் திறந்துவைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஸ்ரீலங்கா ரெலிகொம் அதிகாரிகள் தொலைபேசிச் சேவை இனிச் சீராகக் கிடைக்கும் என்று கூறியிருந்தனர். 'உதயன்'கூட அதனை விரிவான செய்திகளாக வெளியிட்டிருந்தது. ஆனால், இரவில் செயலிழக்கும் தொலைபேசிப் பிரச்சினை இன்னும் தொடர்கிறது. இதனை நீக்க 'ரெலிகொம்' அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தக் குறைபாட்டுக்கான காரணத்தையும் அவர்கள் பாவனையாளர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். செய்வார்களா?

வண்ணார்பண்ணை. க.மு.கந்தசாமி

# ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் அனுகூலம் தொடர்பாகச் சுற்றறிக்கை

தென்மராட்சி,மார்ச்19

அரச ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தில் இணையும் ஓய்வூதியர்களுக்குக் கிடைக்கவுள்ள அனுகூலங்கள் தொடர்பான சுற்றறிக்கை பிரதேச செயலகங்களுக்குக் கிடைத்துள்ளது.

சுற்றறிக்கைப் பிரகாரம் நிதியத்தில் அங்கத்தவராக இணையும் ஓய்வூதியர்கள் 24 மாதங்களின் பின்னர் அடையும் நன்மைகளின் விவரங்கள் வருமாறு:-

ஓய்வூதியரின் உயர்கல்வி கற்கும் ஒரு பிள்ளைக்கு மூன்று வருடங்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படும் என்றும் -

வியாபார அபிவிருத்தியில் ஈடுபடுவோருக்கு 10ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படும் என்றும் -

அங்கத்தவர் மரணமடைந்தால் அவர் செலுத்தியுள்ள சந்தாப்பணத்தின் 10மடங்கு தொகை அவரின் பிள்ளைக்கு வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-117)

# முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறார் ஜனாதிபதி

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்18

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க முயல்கின்றார். ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக ஒரு சதமேனும் கிடைக்கவில்லை என்று அவர் கூறுவது குழந்தைப்பிள்ளைத்தனமான பேச்சு என்று சாடுகிறார் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தெற்காசிய நாடுகளில் இலங்கை அரசு மேற்கொண்ட துரித நிவாரண நடவடிக்கைகளைப் பாராட்டிய ஐரோப்பிய நாடுகளும் எண்ணெய்வள நாடுகளும் கோடி கோடியாக நிதி உதவியை வழங்கியுள்ளன என ஜனாதிபதி முன்னர் பெருமை அடித்துக் கொண்டார்.

அதேவேளை, நிதி அமைச்சுக்கான நாடாளுமன்ற ஆலோசனைக்குழுக் கூட்டத்தின்போது நிதி அமைச்சின் செயலாளர் ஜயசுந்தர,

ஆழிப்பேரலை அனர்த்த நிதியாக 70 கோடி அமெரிக்க டொலர் கிடைததுள்ளது. அப்பணம் இவ்வருடத்தில் நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்படவுள்ளது" என்று குறிப்பிட்டார்.

நிதி அமைச்சுக்கான ஆலோசனைக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜயசூரியவும் நானும் கலந்துகொண்டோம்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா தம்புள்ளயில் போய் அனர்த்த நிவாரண நிதிஉதவியாக செப்புக்காசு கிடைக்கவில்லை என்று கூறுகின்றார். இது ஒரு குழந்தைப் பிள்ளைத்தனமான பேச்சு.

நிவாரண நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மோசடிகளை மூடி மறைப்பதற்காகவே இப்படிப் பேசுகின்றார் ஜனாதிபதி. இதுதன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் ஒரு செயலாகும் - என்றார் பீரிஸ். (எ-க)

## மயானப் புனரமைப்புக்கு இடைக்கால சபை

தென்மராட்சி,மார்ச்19

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக மயானத்தில் தகனக்கிரியை செய்யும் இடத்தில் கொட்டகை அமைப்பதுடன், சேதமடைந்த மண்டபத்துக்கான திருத்த வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களைச் செயற்படுத்த சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் தலைமையில் 13பேர் கொண்ட இடைக்கால சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற மயான அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் இம் முடிவுகள் எடுக்கப்பட்டன.

(எ-117)

# யாழ்.மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு முதலாம் கந்தாய மருந்து விநியோகம்

வலி.தென்மேற்கு,மார்ச்19

யாழ் சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு இவ்வருட (2005) முதலாம் காலாண்டுக்கான (கந்தாயத்திற்கான) மருந்துவகைகளை யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஆகியவற்றிற்கு இவ்வாரம் தொடக்கம் நேரடியாக வாகனங்கள் மூலம் கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றது.

இதன் பிரகாரம் தீவகம் பிரதேசத்திலுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அனலைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய அரச வைத்தியசாலைகளுக்கு கடந்த 14ஆம் திகதியன்று மருந்துவகைகள் விநியோகிக்கப்பட்டன.

ஏனைய வைத்தியசாலைகளுக்கு மருந்து வகைகள் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன என யாழ். சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

# சுனாமியால் பெற்றோரை இழந்த சிறுமிக்கு ரூபா 50 ஆயிரம் வங்கியில் வைப்பு

தென்மராட்சி,மார்ச்19

முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி ஆழிப் பேரலையில் பெற்றோர் மற்றும் சகோதரர்களை இழந்த சிறுமிக்கு 50 ஆயிரம் ரூபா வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கி கல்வி பயிலும் சிறுமியின் பெயருக்கு 50 ஆயிரம் ரூபாவுக்கு நிரந்தர வைப்புச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு வழங்குமாறு வெளிநாட்டில் உள்ள ஒருவர் அனுப்பியதாக கிடைத்த பணத்தில் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் க.செல்வராசா இந்தச் சிறுமியின் பெயருக்கு 50 ஆயிரம் ரூபாவினை நிரந்தர வைப்பிலிட்டதுடன், சுனாமியால் பாதிக்கப்பட்டு மனைவி மற்றும் பிள்ளைகளை இழந்து சாவகச்சேரியில் தங்கியுள்ள இருவருக்கு தொழிலினை ஆரம்பிக்க 25 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள மீன்பிடி உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளார்.

சிறுமியின் பெயரில் பெறப்பட்ட நிரந்தர வைப்புச் சான்றிதழையும் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் சாவகச்சேரி லிகோரியார் தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகள் ஊடாக வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டில் உள்ள ஒருவர், மீசாலையைச் சேர்ந்த முன்னாள் புகையிரத நிலைய அதிபர் நா.வேலாயுதபிள்ளை என்பவருக்கு அனுப்பப்பட்ட பணத்தினைப் பயன்படுத்தி இந்த உதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

# மக்கள் சேவகனாகப் பணியாற்றியவர்



பிறந்தது முதலாம் திகதி, மாணவனாக, உத்தியோகத்தனாக நிர்வாக அதிகாரியாக, சமூகத் தொண்டனாக முதலாமிடமே இவருக்கு உரியதாயிற்று.

மாணவனாக இருந்த காலத்தில் வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். ஆங்கில எஸ்.எஸ்.சி பரீட்சையில் முதலாவது பிரிவில் சித்தியடைந்து பல பாடங்களில் அதி சிறந்த சித்தியைப் பெற்றார். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மதிக்கப்பட்ட உத்தியோகமாக விளங்கியது அரச லிகிதர் சேவையே. எனவே மற்றும் யாழ்ப்பாண இளைஞர்களைப் போன்று இவரும் "கிளறிக்கல்" பாஸ் பண்ணிய பின் கொழும்பில் மோட்டார் வாகனப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் லிகிதராக நியமனம் பெற்றார். இவரது மேன்மையும் ஆழமான அறிவாற்றலும் ஞானமும் இவரைக் குறுகிய காலத்தில் கவர்ச்சிகரமாக விளங்கிய இலங்கை நிர்வாக சேவையாகிய ஏணியின் உச்சப்படியில் ஏற்றி வைத்தது வியப்பன்று.

இவர் கணக்காளர் தெரிவிக்கான போட்டிப் பரீட்சையிலும் இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையிலும் சித்தி பெற்று இலங்கை நிர்வாகச் சேவையைத் தேர்ந்தெடுத்தார். நிர்வாக சேவையில் அடம்பன், மாந்தை, வேலணை, சங்கானை ஆகிய பகுதிகளின் உதவி அரச அதிபராகவும் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாகத் திறக்கப்பட்ட குடிவரவு குடியகல்வு காரியாலயத்தின் முதலாவது உதவி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளராகவும் நியமிக்கப்பட்டார்.

## நீத்தார் நயப்புரை

இவர் போக்குவரத்துப்பற்றிக் கற்று லண்டன் போக்குவரத்து நிறுவனத்தின் (LONDON INSTITUTE OF TRANSPORT) பட்டதாரியாகப் பட்டம் பெற்றிருந்தமையால் இலங்கைப் போக்குவரத்து (C.T.B)சபையின் ஆரம்பகாலத் தொடர்பாடல் அதிகாரியாக சிலகாலம் சேவையாற்றினார்.

இவர் தனது ஜனரஞ்சக நடவடிக்கைகளினால் மக்களின் அன்பையும், ஆதரவையும் சம்பாதித்துக் கொண்டார். இவர் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் மக்களின் சேவகனாகப் பணியாற்றி சகலரதும் நன்மதிப்பைப் பெற்றார்.

நூற்றுக் கணக்கான அரச உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட காலங்களில் அவர்களுக்காக வாதிட்டுத் துல்லியமாக நியாயங்களை எடுத்துக்காட்டி அவர்களை நிரபராதிகளென்று ஜயம்திரிபற நிரூபித்து நீதிச்சட்டக்கோவை, நிறுவன சட்டக கோவைகளில் இருந்து ஆதாரங்களை அனாயாசமாக விலாவாரியாக அத்தியாயங்களையும் பக்கங்களையும் எடுத்துக்காட்டி விசாரணையாளர்களை வியக்க வைத்து தனது கட்சிக்காரருக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். இவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற காலத்திலும் சேவை செய்யும் ஒரே நோக்கில் பிரித்தானியா அரசு சார்பற்ற நிறுவனமான "ஒக்ஸ்பாம்" இல் இணைப்பதிகாரியாகக் கிளிநொச்சியில் கடமையாற்றினார்.

**செ.கதிர்காமத்தம்பி இளைப்பாறிய அதிபர்.**

# பஸ் வழிப்பாதை இலக்கங்களை விரைவில் மாற்றுவதற்கு ஏற்பாடு

வலி.வடக்கு,மார்ச்19

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் பஸ் வண்டிகளுக்கான வழிப்பாதைகளின் இலக்கங்கள் மாற்றப்படவுள்ளன.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடவடிக்கையின் முன்செயற்பாட்டு ஏற்பாடுகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே வழிப்பாதையில் வெவ்வேறு இடங்களுக்கு பஸ்கள் பயணங்களை மேற்கொள்கின்ற போதிலும் ஒரே இலக்கமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பயணிகளின் நன்மையினைக் கருத்தில் கொண்டு இவ் வழி இலக்கங்களை மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகக் கூறப்பட்டது.

குடாநாட்டில் பஸ்களுக்கான வழிப்பாதை இலக்கங்களை மாற்றுவதற்கு வேண்டிய செயற்பாடுகளை யாழ் மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

வெகுவிரைவில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையுடன் இணைந்து குடாநாட்டிலும் பஸ் வண்டிகளுக்குப் புதிய வழிப்பாதை இலக்கங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-86)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி பிரதமர் மஹிந்தவுக்கு மட்டுமே உண்டு

## லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான சகல தகுதிகளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே உண்டு. அரசில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி என்ற வகையில் எமது முடிவும் இதுவே. - என்கிறார் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன்.

லங்கா சமசமாஜக் கட்சியின் கூட்டம் அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் போட்டியிடுவதற்குத் தமது ஆதரவைத் தெரிவிப்பது என அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சார்பாக ஜனாதிபதி வேட்பாளருக்கு போட்டியிடும் சகல தகுதிகளும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே உண்டு. அதை யாராலும் மறுக்க முடியாது என்பதை எமது கட்சி வலியுறுத்துகிறது என்றார் அதன் தலைவர் பட்டிவீரக்கோன்.

அதேசமயம், அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எதையுமே செய்யவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசில் அங்கம்வகிக்கும் கட்சிகளில் ஜே.வி.பியை தவிர ஏனைய கட்சிகள் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தவே விரும்புகின்றன என்று கூறப்படுகின்றது.

(க-3)

# பாவங்களுக்காக மனம் வருந்துவோம்

'இயேசுவை சிலுவையில் வைத்து மூன்று ஆணிகளால் அறைந்து கல்வாரி மலையின் உச்சியில் உயர்த்தினார்கள்'

பலநாடுகளுக்கு பல்லாயிரம் மைல்கள் நடந்து நற்செய்தி முழக்கமிட உதவிய கால்கள், ஆணியால் துளைக்கப்பட்டன. இறந்தோருக்கும், தீய ஆவியால் பீடிக்கப்பட்டோருக்கும் வாழ்வளித்து, பாவிகளை மன்னித்து, பல்லாயிரம் புதுமைகள் புரிந்த திருக்கரங்களுக்குக் கிடைத்த பரிசு கூரிய ஆணிகள்.

## தவக்காலச் சிந்தனை

இந்த ஆணிகளும் அதன் மேல் விழுந்த அடிகளும் யூதரால் மட்டுமா மேற்கொள்ளப்பட்டது? அவற்றின் மீது விழுந்த அடிகள் எம்மாலும் நிகழ்த்தப்பட்டவையே. இந்த மூன்று ஆணிகளும் குறித்து நிற்பது என்ன? இறைவனுக்கும், தனக்கும், பிறருக்கும் எதிராகச் செய்யப்படும் துரோகங்களும், பாவங்களுமே இந்த மூன்று ஆணிகளின் அர்த்தமாகும்.

எமது குடும்ப உறவுகளை விரிசலாக்கி கணவன் - மனைவி, பிள்ளைகள் உறவுகளிடையே பகைமையை வளர்த்து நாம் பரிமாறிய சொற்கள் இந்த ஆணிகளைப் போன்றதில்லையா? எனவே, ஒருவகையில் நாமும் இறைமகனை அறைந்த குற்றவாளிகளே.

## முப்பத்தொன்பதாம் நாள்

அவரவர் நிலையிலேயே பிறரை ஏற்றுக் கொண்டு ஒப்புரவாகி நட்புறவை புதுப்பிப்போம். எம்மால் அடுத்தவனுக்கு ஏற்பட்ட உள்ளக் காயங்களுக்கு பரிவு, மன்னிப்பு, சமாதானம் என்னும் மருக்கிடுவோம். அன்பென்னும் ஆணிகளை பிறர் இதயத்தில் அறைந்திடுவோம்.

- எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.



மடத்தடி மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும், தற்போது நீர்வேலி வடக்கு, காமாட்சியம்பாள் கோவிலடியில் வசிப்பவருமான வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் (பொன்னார்) கலாபூஷணவிருது பெற்றுள்ளார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற விருதுவழங்கும் விழாவில், கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர் விஜிதஹேரத்திடம் இருந்து வே.சிதம்பரநாதன் கலாபூஷணம் விருதினைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.




# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

19 03 2005

கரவெட்டி வடக்கு, இடைக்குறிச்சியைச் சேர்ந்த
**கண்ணன் - சிலோசினி தம்பதிகளின்**
செல்வப் புதல்வி **செல்வி கஜானி** அவர்கள்
இன்று (19.03.2005) சனிக்கிழமை
தன்னுடைய முதலாவது பிறந்த தினத்தை
அவரது இல்லத்தில் குதூகலத்துடன்
வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
செல்வி கஜானியை அப்பா, அம்மா,
உற்றார், உறவினர்கள் அனைவரும்
பல்கலையும் கற்றுச் சீரோடுஞ்
சிறப்போடும் பல்லாண்டுகாலம் நலமுடன்
வாழவேண்டுமென மனமார
வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**கண்ணன் - சிலோசினி.**

கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
சரஸ்வதி வித்தியாலய வீதி, இடைக்குறிச்சி. (43201)(50-14-15)

**செல்வி கஜானி**

# 25ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## வே.க.ஏரம்பு



23-02-2005 புதன்கிழமை அமரரான புங்குடுதீவைச் சேர்ந்த அறிஞர், பண்பாளர், சுற்றம் பேணும் உத்தமர், மூச்சும் பேச்சும் சமூக உயர்வோடு கூடிய சிந்தனையாளர், நாட்டுப்பற்றாளர் வே.க. ஏரம்பு (ஓய்வுபெற்ற அதிபர்) இழப்பின் 25ஆம் நாளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் செலுத்தி வானுறையும் தெய்வத்துள் சாந்திபெற விழைகின்றோம்.

அன்னலட்சுமி, சேனாதிராசாவும்,
மக்கள், சுற்றம்.

புங்குடுதீவு,
3ஆம் வட்டாரம். (43212)(46-14-15-42)

# பதவி வெற்றிடங்கள்

யாழ்.நகரின் மத்தியில் அமையவுள்ள எமது Channel Center இல் பணிபுரிவதற்குப் பின்வருவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Trained Nurses
2. Trainee Nurses
3. Co-ordinator/Receptionist
4. Pharmacist
5. பார்மசியில் வேலைசெய்த அனுபவமுள்ளவர்கள்.

**விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய முகவரி:**
**268/1,பலாலி வீதி, கந்தர்மடம்.**

விண்ணப்ப முடிவு திகதி :24-03-2005

(43239)(46-14-15-42)

# மந்துவில் வடக்கில் மணல் அகழ்வு தீவிரம்

தென்மராட்சி,மார்ச்19

மந்துவில் வடக்குப் பகுதி காணிகளில் மண் அகழ்வு அதிகரித்துள்ளதால் பல இடங்களில் பாரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

தினமும் சுமார் 50இற்கும் மேற்பட்ட வாகனங்கள் அப்பகுதி வயல்நிலங்கள், மேட்டு நிலங்கள் பனங்காணிகள் ஆகியவற்றில் மணல் ஏற்றி வருவதாகவும் -

சமாதான முறையில் இதனைத் தடுக்கச் செல்வோர் மணல் அகழ்வோரால் பயமுறுத்தப் படுவதாகவும் - மீசாலை கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக அலுவலருக்கு முறையிட்டுள்ளனர்.

இந்த முறைப்பாட்டின் பிரதிகள் தென்மராட்சி பிரதேச செயலர், யாழ்.பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், யாழ்மாவட்டப் செயலக சூழல் பாதுகாப்பு அலுவலர், தென்மராட்சிப் பிரதேச செயலக சூழல் பாதுகாப்பு அலுவலர், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர், யாழ்.அரச அதிபர், சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சாவகச்சேரி நீதி மன்றப் பதிவாளர் ஆகியோருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(3-117)

# மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்19

நீர்வேலி அண்ணமார் மகேஸ்வர ஆலய கட்டட வளர்ச்சி நிதிககாக மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற பகல் 2 மணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் நடைபெறவுள்ளது.

(3-202)

# முதலாம் ஆண்டின் நீங்காத நினைவில் ...

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 - 04 - 1950 | 30 - 03 - 2004 |



அமரர்

## சின்னக்குட்டி செல்லத்துரை

திதி : நவமி [19-03-2005]

ஆண்டு ஒன்றின் நினைவிலும்
என் மனதில் உங்கள்
உருவம் மறையவில்லை
எத்தனை ஆண்டு சென்றாலும்
பசுமரத்தாணியாய் நினைவில் நிற்கும்.

கைதடி மேற்கு,
கைதடி. (43221)(46-14-15-42)

– மனைவி.

நெஞ்சைவிட்டகலாத

# நான்காம் ஆண்டு நினைவலையில்....!




## திருமதி துரைராஜா தவமலர்

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 24-12-1945 | 19-03-2001 |

காலத்தின் சுழற்சியில் ஆண்டுகள் நான்கு
கனமான நிகழ்வுகளாய் கடந்து சென்றதுவே!
ஞாலத்தில் எம்முடன் உலாவுதல் போன்று
உள்ளுணர்வு கலந்தே வாழ்கின்றோம் நாமிங்கே!

"தவமஹால்"
அல்வாய். (43227)(46-14-15-42)

– குடும்பத்தினர்.




விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும்
தத்துவாசிரியருமான
கலாநிதி அன்ரன் பாலசிங்கம்
அவர்கள் எழுதிய

# போரும் சமாதானமும் (WAR AND PEACE)

## நூல் அறிமுக விழா

இடம் : கைலாசபதி கலையரங்கு
யாழ். பல்கலைக்கழகம்
காலம்: இன்று (19.03.2005 ) சனிக்கிழமை
நேரம்: பி.ப 3.00 மணி

ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் அக்கறை, ஆர்வம்கொண்ட அனைவரும் வரலாற்றியல் மாணவர்களும் தவறாது படிக்கவேண்டிய அரிய நூல் .

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை.**

(C-41521)(38-15-42)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி சிங்கராசா நிமலராணி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28-12-1954 | 17-02-2005 |

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின்
பிறப்பிடமாய்த் திகழும் எங்கள் குடும்பத்தின்
குலவிளக்கே!

உன்னை எங்கும் தேடுகின்றோம்
ஆயிரம் உறவிருந்தும் அம்மா என்றழைக்க
நீ இல்லையே கனத்த மனதுடன் காத்திருக்கின்றோம்.

இன்று (19.03.2005) சனிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு [illegible] உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] நிலைய வீதி,
[illegible]

தகவல்:
**கணவர் – சிங்கராசா, பிள்ளைகள்.**

விளம்பர அனுசரணை: உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பேச்சுகளில் நோர்வே ஓரங்கட்டப்படுகிறதா? ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதற்குத் தயாராகுங்கள்

## திருமலை தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்19

தென்னிலங்கையில் சமாதானத்துக்கு எதிரான பேரினவாதிகளும் சர்வதேச சதிகாரக் கும்பல்களைச் சேர்ந்தவர்களும் ஒன்றுசேர்ந்து, நோர்வேயை, சமாதான முயற்சிகளிலிருந்து ஓரங்கட்டுவதற்கும் இந்தியாவை இம்முயற்சிக்குள் உள்வாங்குவதற்கும் பல்வேறு விதமான சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். நாட்டுக்கு ஆபத்தான இந்த நடவடிக்கைகளை நிறுத்துமாறு தமிழ்மக்கள் சார்பில் கோருகின்றோம்.

- இப்படிப் பகிரங்கமாகக் கோரியுள்ளது திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை.

இதுவிடயமாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்த நிறுத்தத்திற்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் உறுதுணையாக இருப்பவர்கள் நோர்வேயின் சமாதானத் தூதர்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. பல்வேறு கஷ்டங்களுக்கும் விமர்சனங்களுக்கும் மத்தியில் சமாதானத்தை உருவாக்க வேண்டுமென்ற உளரீதியான பற்றுதலுடன் நோர்வேத் தரப்பினர் ஆற்றிவரும் பணியை சமாதானத்தை விரும்பும் சகல சக்திகளும் உணர்ந்துகொண்டுள்ளன.

தமிழ்த் தேசியப் போராட்டத்தின் நியாயத் தன்மையினை உணர்ந்து தமிழ்பேசும் மக்களுக்கு நீதியானதொரு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதற்காக ஸ்ரீலங்கா தேசத்தின் அரசுடனும் ஜனாதிபதியுடனும் சமாதானத்தை விரும்புகின்ற சக்திகளுடனும் சமாதானத்தை எதிர்க்கின்ற பேரினவாத சக்திகளுடனும் அடிக்கடி சந்தித்துப் பேச்சுக்களில் ஏற்படும் முரண்பாடுகளைக் களைவதற்காக மூன்றாண்டுகளாக அவர்கள் படும் துன்பத்தைத் தமிழ்மக்களாகிய நாங்கள் நன்கு அறிவோம்; சர்வதேசமும் அறியும்.

- இவ்வாறு சமாதானத்திற்காக அயராது உழைத்துவரும் நோர்வையை ஓரங்கட்டிவிட்டு, இந்தியாவை உள்நுழைப்பதற்காகக் கதிர்காமர் பல்வேறு விதமான சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அண்மையில் இந்தியாவிற்கு அவர் மேற்கொண்ட விஜயம், இந்நடவடிக்கையின் ஒரு பகுதியே ஆகும். சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டபொழுது இந்தப் பேச்சுகளில் மத்தியஸ்தராகக் கலந்துகொண்டு சமாதானத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவைக் கேட்டுக்கொண்டனர். பல்வேறு தரப்பினர் ஊடாகவும் இந்தியாவை அணுகித் தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டென்றும், இந்தியாவைத் தமிழ் மக்கள் உளரீதியாக நேசிக்கின்றார்கள் என்றும், இந்தியா இச்சமாதான முயற்சிக்குக் கட்டாயமாகப் பங்காற்றவேண்டும் எனவும் வேண்டிக்கொண்டனர்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்தியா இம்முயற்சியிலிருந்து விலகிக்கொண்டது. தமிழ் மக்கள் இதனை மிகுந்த கவலையுடன்தான் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இன்று சமாதான முன்னெடுப்புகள் சர்வதேச வியாபகம் பெற்று நோர்வேயின் முயற்சி பலராலும் பாராட்டப்படுகின்ற சூழ்நிலையில், ஸ்ரீலங்கா தேசத்துக்குள் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் சமாதானப் போர்வையில் உள்நுழைந்துள்ளதைப் பொறுக்கமுடியாத இந்திய தேசம், ஸ்ரீலங்காவின் நச்சுத்தனமான நடவடிக்கைக்குத் துணை போகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவே தமிழ்மக்கள் அச்சமடைகின்றனர்.

தமிழ் பேசும் மக்களுக்குச் சரியான தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு இந்தியா தன்னாலான பங்களிப்பினை வழங்கவேண்டுமென உளப்பூர்வமாக வேண்டுகிறோம். ஆனால், எக்காரணம் கொண்டும் சமாதானத்திற்கு எதிரான சக்திகளின் வலையில் இந்தியா சிக்கித் தமிழீழத் தேசியப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படக் கூடாதெனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று தென்னிலங்கையில் சமாதானத்திற்கெதிரான பேரினவாதக் கும்பல்களும், சர்வதேச சதிகாரக் கும்பல்களும் ஒன்றுசேர்ந்து நோர்வேயைச் சமாதான முயற்சியிலிருந்து ஓரங்கட்டுவதற்கும் இந்தியாவை இம்முயற்சிக்கு உள்வாங்குவதற்கும் பல்வேறு விதமான சூழ்சசி வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

இம்முயற்சிகளுக்குக் காரணகர்த்தாவாக இருப்பவர் அமைச்சர் கதிர்காமர் ஆவார். அவர் இந்த ஆபத்தான வேலையை உடனே நிறுத்தவேண்டும். இல்லாவிடில் இது சமாதானத்திற்குக் கொள்ளிவைக்கும் படுபாதகமான செயலாகவே அமையுமெனத் தமிழ்பேசும் மக்கள் சாரபில் தெரிவித்துக்கொள்கின்றோம். தமிழ் மக்கள் நன்றிமறந்த இனமல்ல, நோர்வேயின் அர்ப்பணிப்புகளை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். நோர்வேக்கு எதிரான விமர்சனங்களையும் கண்டனங்களையும் எதிர்க்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-3)

## அரசியல் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு,மார்ச்19

புதிய ஜனநாயகக் கட்சியின் வட பிரதேசக் கிளை நடத்தும் "சுனாமிக்குப் பின்பான அரசியல் நிலையும் சர்வதேச நாடுகளின் தலையீடும்" என்ற விடயம் பற்றிய அரசியல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கட்சியின் வடபிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர் க.தணிகாசலம், மனிதநேயத் தொழிற்சங்கப் பிரமுகர் மு.தியாகராசா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (எ-135)

## வீதி பலத்த தேசம்

வலி.தென்மேற்கு,மார்ச்19

மாதகல், காஞ்சிபுரம் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்துவருவதால் இவ்வீதி குண்டும்குழியுமாக உள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும சிரமப்பட வேண்டியிருப்பதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வலி.தென்மேறகுப் பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகப் பிரிவில் அமைந்துள்ள இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதியிலுள்ள மக்கள் கடிதமூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும் இவ்வீதி ஊடாகவே மாதகல் கடற்கரையிலுள்ள இந்துமயானத்திற்கும் மக்கள் தகனக் கிரிகைக்காகச் சென்றுவருவதும் குறிப்பிடத்தக்கது. (எ-135)

**நெடுந்தீவிலிருந்து மாடுகள் அடைத்துக் கொண்டுவரப்பட்ட வழக்கு:**

# மாடுகள் விற்று அரசிறைக்குச் செலுத்திய பணத்தை உரிமையாளருக்கு வழங்க மேல் நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம்,மார்ச்19

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 19 மாடுகளினதும் விற்பனைப் பணத்தை அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

15ஆம் வட்டாரம், நெடுந்தீவைச் சேர்ந்த சுப்பையா தியாகராசா, சின்னத்தம்பி பரராஜசிங்கம் ஆகியோர் தாக்கல் செய்திருந்த மீளாய்வு விண்ணப்பங்கள் மீதான விசாரணையின் முடிவில் இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 31ஆம் திகதி நெடுந்தீவிலிருந்து கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டு, குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து இரண்டு லொறிகளில் அடைக்கப்பட்டு எடுத்துச்செல்லப்பட்ட 19 மாடுகளையும் லொறிச் சாரதிகள் மற்றும் அவற்றிலிருநத 7 நபர்களையும் கைதுசெய்த ஊர்காவற்றுறைப் பொலீஸார் அவர்களை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்ததுடன், வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

விலங்குகள் மீதான சித்திரவதைத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட இரண்டு வழக்குகளில் எதிரிகள் அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தலா ரூபா ஆயிரம் அபராதம் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் - ஏற்கனவே தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், சம்பந்தப்பட்ட மாடுகளைப் பறிமுதல் செய்து ஏலத்தில் விற்கவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

பறிமுதல் கட்டளையை மீளாய்வு செய்யுமாறு கோரி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மாடுகளின் உரிமையாளர்களான இரண்டு எதிரிகள் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் இந்த மீளாய்வு விண்ணப்பங்களை ஆதரித்து சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆஜரானார். எதிர்வாதிகளான ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி ஆஜராகினர்.

விலங்குகள் மீதான சித்திரவதைத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சித்திரவதைக்கு ஆளான விலங்குகளைப் பறிமுதல் செய்ய நீதிவான் நீதிமன்றுக்கு அதிகாரம் கிடையாது என்று வாதாடிய சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவின் கருத்தினைத் தாம் ஏற்றுக்கொள்வதாக அரச சட்டவாதி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பறிமுதல் உத்தரவை இரத்துச் செய்த நீதிபதி, பகிரங்க ஏலத்தில் 19 மாடுகளையும் விற்று அரசிறைக்குச செலுத்தப்பட்ட பணத்தை மனுதாரர்களிடம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று மீள ஒப்படைக்கவேண்டும் என்று கட்டளை வழங்கினார்.

பறிமுதல் செய்யப்பட்ட 19 மாடுகளின் மொத்தப் பெறுமதி சுமார் ஒன்றரை லட்சம் ரூபா என மனுதாரர்களின் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ)



கோப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதனுக்கு நடத்தப்பட்ட பிரியாவிடை விழாவின் போது உதவிப் பிரதேச செயலர் திருமதி சா.அஞ்சலிதேவி பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)

# மானிப்பாய் லயன்ஸ் ஸ்தாபன நிகழ்வு சனியன்று சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம்,மார்ச்19

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் 7ஆவது வருட ஸ்தாபன தின நிகழ்வு கடந்த சனிக்கிழமை மானிப்பாய்ப் பிரதேச சபை மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

தென்னிலங்கையிலிருந்து வருகைதந்திருந்த லயனஸ் கழகங்களின் பிரதிநிதிகளுடன் யாழ். மாவட்டத்தில் இயங்கும் லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் பலரும் இந்த ஸ்தாபன நிகழ்வில் கலந்துகொண்டனர்.

லயன்ஸ் கழகத்தின் புதிய மாவட்டமான 306 பி I இன் உப ஆளுநர் பதவிக்குக் கழகத்தின் சிரேஷ்ட தலைவர் எஸ்.எஸ்.தங்கராசாவை நிறுத்துவது என்ற முடிவு இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் சபையின் முன்னாள தலைவர் லயன் சுனில் வட்டவல, முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் சபையின் தற்போதைய தலைவர் மொஹறான் டி சில்வா, முன்னாள் ஆளுநர்களான எஸ்.சிவபாலசுந்தரம், கே.தில்லைநாதன் ஆகியோர் தங்கராசாவுக்கு ஆதரவாக உரையாற்றினர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட கொழும்பு, வத்தளை மற்றும் யாழ். மாவட்டத்தில் இயங்கும் கிளைகளின் பிரதிநிதிகளும் தங்கராசாவை ஆதரித்து உரையாற்றினர். (எ-3)

# நாளாந்த போக்குவரத்துக்கு பஸ் இல்லை பொங்கலுக்கு மட்டும் விசேட சேவையா?

## 775 மார்க்க பஸ்ஸை மறித்தனர் மட்டுவில் மக்கள்

தென்மராட்சி,மார்ச்19

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்திற்கு விசேட சேவையில் ஈடுபட்ட 775 மார்க்க பஸ் சேவையினை நடத்தவிடாமல் அப்பகுதி மககள் வீதி மறியல் போராட்டம் நடத்தித் திருப்பி அனுப்பினர்.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதுபற்றித் தெரியவருவதாவது:-

மட்டுவில் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த காலம் தொடக்கம் சாவகச்சேரியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி - புத்தூர் ஊடாகச் சுன்னாகத்திற்குச் செல்லும் 775 இலக்க மார்க்க பஸ் சேவையினை நடத்துமாறு பலதடவைகள் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளரிடம் முறையிடப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு காரணங்களைக் கூறி இந்தச் சேவையைப் போக்குவரத்துச்சபை நடத்தவில்லை என்றும்-

தற்போது பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்திற்காக இதே மார்க்கத்தில் விசேட பஸ் சேவை நடத்தப் போக்குவரத்துச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் -

இதற்கு ஆட்சேபம் தெரிவித்தே பஸ் சேவையினைத் தொடரவிடாமல் தடுத்ததாகவும் - பிரதேசமக்கள் தெரிவித்தனர்.

தினமும் இந்த மார்க்கத்தில் ஒரு பஸ் சேவையாவது நடத்தப்படாவிடின் பொங்கல் உற்சவத்திற்குப் பஸ் சேவை நடத்தவிடமாட்டோம் என்றும் - அப்பகுதி மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் -

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் 775இலக்க மார்க்கத்தில் பஸ் சேவையினை ஆரம்பித்துப் பொங்கல் உற்சவத்திற்கு வரும் மக்களின் போக்குவரத்துக்கு உதவுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளரிடம் கேட்டுள்ளார். (எ-117)

# நிவாரணமாகக் கிடைத்த நிதி குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

## அவசியம் என ஐ.தே.க.வலியுறுத்து

ஜனாதிபதி நிதியை நிர்வகிக்கும் சபை கடந்த மூன்று வருடங்களாகக் கூடவில்லை. இதனால், பல கோடி ரூபா நிதியை முடக்கி வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதே வேளை, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் தொடர்பாகத் தனிப்பட்ட முறையில் ஆரம்பிக்கப்பட்ட நிதியம், பிரதமரின் நிதியம், அமைச்சுக்களுக்கான உதவிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான உதவிகள் என நாட்டிற்குள் பல ஆயிரம் கோடி ரூபா நிதி வந்து குவிந்துள்ளது.

இவை தொடர்பாக விசாரணை செய்வதறகு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட நாள் முதல் பல்வேறு வழிகளில் இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆனால், இதுவரை மொத்தமாக எவ்வளவு தொகை கிடைத்துள்ளது என்ற விவரம் எவருக்கும் தெரியாது. பொருள்களாகக் கிடைத்தவற்றின் விவரம், நன்கொடையாகக் கிடைத்தவற்றின் விவரம், நீண்டகாலத் தவணைக் கட்டணமாகக் கிடைத்தவற்றின் விவரம் என்பன எந்த ஓர் இடத்திலும் பதிவில் இல்லை.

இந்த விவரங்களை அரசு பகிரங்கமாக வெளியிடவேண்டும் என்று ஐ.தே.க. இப்போது வலியுறுத்துகின்றது.

"உதவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டன? மிகுதியாக இருப்பவை எவ்வளவு? என்ற உண்மைகளும் கண்டறியப்படவேண்டும். இந்த உண்மைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் ஐ.தே.க. வலியுறுத்தியுள்ளது"- என்றார் பந்துல குணவர்த்தன எம்.பி. (க-3)

# ஊடகவியலாளர் கணனிப் பயிற்சிநெறியில் தமிழ்மொழி புறக்கணிப்புக்குக் கண்டனம்

உலக வங்கி நிதியுதவியுடன் ஊடகவியலாளர்களுக்கு கணனிப் பயிற்சிகளை வழங்கும திட்டத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டிருப்பதற்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலக வங்கியின் நிதி உதவியுடன் ஊடகவியலாளர்களுக்குக் கணனிப் பயிற்சிகளை வழங்குவதற்கென மேற்கொள்ளப்பட்டுவரும் ஈ-ஸ்ரீலங்கா (E-Srilanka) திட்டத்தில் தமிழ்மொழி முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மொழிக்கு அரசியலமைப்பின் மூலமாக வழங்கப்பட்டுள்ள சம அந்தஸ்தத்துக்கு முற்றிலும் விரோதமான ஒரு செயற்பாடு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். தமிழ் ஊடகவியலாளர்களைப் புறக்கணிக்கும் இந்தப் பாகுபாடான செயற்பாட்டின் காரணமாக தேவையும், ஆர்வமும், திறமையும் உள்ள பல தமிழ் ஊடகவியலாளர்கள் கணனிப் பயிற்சியை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேவேளையில், சிங்கள மொழி மூலமான ஊடகவியலாளர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது

அரசிற்குச் சொந்தமான 'தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (Information and Communication Technology Agency Srilanka) என்ற அமைப்பே இந்த ஈ - ஸ்ரீலங்கா என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. பிரதமரின் செயலகத்தின் கீழேயே இந்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை இந்நிறுவனம் அண்மையில் ஆரம்பித்தது. இத்திட்டத்துக்காக உலக வங்கி பெருந்தொகையான நிதி உதவியையும் வழங்கியுள்ளதாக அறிய வருகின்றது. இருந்தபோதிலும் இதற்கான விண்ணப்பங்களைக் கோரி வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் அனைத்தும் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன.

இதற்காக விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய தமிழ் ஊடகவியலாளர்களிடம் சிங்களமொழி மூலமாக இந்தப் பயிற்சியை உங்களால் மேற்கொள்ள முடியுமா? என்றே கேள்வி எழுப்பப்பட்டதாக நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற ஊடகவியலாளர்கள், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்திடம் புகார் செய்திருக்கின்றார்கள்.

இந்நாட்டில் பெருந்தொகையான தமிழ் ஊடகவியலாளர்கள் இருக்கின்றபோதிலும் தமிழ்மொழி மூலமாகவும் இந்தப் பயிற்சிநெறியை நடத்துவதில் இந் நிறுவன அதிகாரிகள் அக்கறையற்றவர்களாக இருப்பதையே இது பிரதிபலிக்கின்றது என நாம் கருத வேண்டியிருக்கின்றது.

சர்வதேச நிதி உதவிகளைப் பெற்று நடத்தப்படும் இதுபோன்ற பயிற்சிநெறிகளில் தமிழ் மொழி திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்படுவதையிட்டு நிதி உதவியை வழங்கும் நிறுவனங்கள் கண்காணிப்பை மேற்கொள்வது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இது தொடர்பான அறிவித்தல்கள் தமிழ் மொழியிலும் வெளியிடப்பட்டிருப்பின் தமிழ் ஊடகவியலாளர்கள் பலரும் அதற்கு விண்ணப்பித்திருக்க முடியும். இது தொடர்பாக நிதி உதவியை வழங்கிய உலக வங்கியும், பிரதமரின் அலுவலகமும் இந்த விடயத்தில் உடனடிக் கவனத்தைச் செலுத்தி தமிழ் ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்படும் நிலையை முடிவுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது - என்றுள்ளது.

(எ-க)

## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்19

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுகவாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நிலைய இயக்குநர் வண.பிதா சூ.டேமியன தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா ஆகியோர் கலந்துகொள்வர். (எ-202)

## பண்டத்தரிப்பில் ஆயுள்வேத வைத்தியசாலை

வலி.தென்மேற்கு,,மார்ச்19

வலி.தென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்புப் பகுதி மக்களின் நன்மை கருதிப் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகத்தில் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்ரர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பண்டத்தரிப்புக் கிராம அபிவிருத்திச் சங்கம், சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை இங்கு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்துவந்தமை தெரிந்ததே.

(எ-135-203)

## பொதுசன உதவிப்பணம்

வலி.தென்மேற்கு,,மார்ச்19

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணக் கொடுப்பனவை பெற்று வருபவர்களுக்கு இம்மாதத்திற்கான கொடுப்பனவு அந்தந்த தபால் அலுவலகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயாளர்கள், காச நோயாளர்கள் உட்பட இப்பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவை பெற்று வருபவர்கள் தத்தமது பிரிவுத் தபால் அலுவலகத்துடன தொடர்பு கொண்டு பெற்றக்கொள்ள முடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்19

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)

---

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

மீசாலை வடக்கைச் சேர்ந்த
பாஸ்கரன் – சகிலா
தம்பதிகளின்
இரட்டைச்
செல்வங்களான

19 – 03 – 2005

HAPPY BIRTHDAY



செல்வன் சாகித்யன் செல்வி சாகித்யா

இருவரும் தமது இரண்டாவது பிறந்தநாளை இன்று (19-03-2005) சனிக்கிழமை சிங்கப்பூரில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார், அப்பம்மா, அம்மம்மாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

குடும்பத்தினர்.

---

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

மண் மகிழ்வு 12 – 06 – 1927



கண் நெகிழ்வு 17 – 02 – 2005

### திருமதி சண்முகநாதன் லீலாவதி

மங்கையர் திலகமாய் மாண்புடன் வாழ்ந்திருந்தீர்
எங்களின் தெய்வமே! எமைவிட்டு எங்குற்றீர்?
உங்களின் உருவம் எம் கண்களில் தெரிகிறதே!
எங்குதான் சென்றாலும் நாங்கள் உமை மறவோம்.

இன்று (19.03.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொள்வதோடு மதியபோசனத்திலும் பங்கேற்று ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

50/21, செட்டித்தெரு, நல்லூர். (C/41533)(50-14-15) - குடும்பத்தினர்.

---

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 26 – 04 – 1932



உதிர்வு 17 – 02 – 2005

அமரர்

### விநாயகர் தங்கவேலு (துரைச்சாமி)

திதி – மாசி மாத பூர்வபக்க நவமி

அன்புடன் பேசி ஆதரவாய் இருந்தீர்
இன்றுடன் நீர் மறைந்து முப்பத்தொரு நாளாச்சே!
என்றும் உங்கள் நினைவு எம் இதயத்தில் இருக்கும்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

இன்று 19.03.2005 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

41/1, துரைராசா வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (43241)(21-32-17-15) குடும்பத்தினர்.

---

உ
சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



17-02-2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி,
அமரர்

### விக்னேஸ்வரன் பற்குணலட்சுமி (றஞ்சா)

அவர்களின்

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19-03-2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

பாடசாலை வீதி,
சங்கானை. (43179)(46-21-17-15)

---

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 23 - 02 - 1933



இறை அடியில் 17 - 02 - 2005

### திருமதி இராமநாதன் நாகம்மா

கடந்த 17-02-2005 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பதீபம் திருமதி இராமநாதன் நாகம்மா அவர்கள் எமைப் பிரிந்து 31 நாள்கள் நிறைவடைகின்றன. அந்நிறைவு நாளான இன்று 19.03.2005 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கின்போது வருகை தந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்திகள், கடிதங்கள் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மற்றும் எல்லா வகையிலும் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீலியம்பனை,
மல்லாகம். –குடும்பத்தினர்.

T.P.: 0773151191 (43241)(21-32-17-15)



யாழ். மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான மோதலில், மத்திய கல்லூரி அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் பந்தை அடித்தாடும் காட்சிகள். (படங்கள் : பிரபா)

# மயூரதனின் அபார ஆட்டத்தினால் பலமான நிலையில் சென்.ஜோன்ஸ்



யாழ்ப்பாணம்,மார்ச்19

'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான மோதலில் சென்ஜோன்ஸ் அணியைச் சேர்ந்த ஏ.மயூரதனின் அபார ஆட்டத்தால் அந்த அணி பலமான நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆட்டம் மீண்டும் தொடங்கியது. சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கடைசி இணை ஜோடிகளான ஏ.மயூரதனும் பி.கஜரூபனும் அபாரமாக ஆடித் தமது அணியை வலுவான நிலைக்குக் கொண்டுவந்தனர்.

மயூரதன் தனது அபார ஆட்டத்தின் மூலம் பத்து பவுண்டறிகள் உட்பட 122 ஓட்டங்களைக் குவித்தார்.

அவரும் கஜரூபனும் இணைந்த ஜோடி 120 ஓட்டங்களைக் குவித்தது.

சுமார் மூன்று மணி நேரம் களத்தில் நின்று விளாசிக் கொண்டிருந்த மயூரதன் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் சென்ரல் வீரர் தயான் வீசிய பந்தில் அணித் தலைவர் றொகானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சென்ரல் அணி ஆடிக்கொண்டிருக்கின்றது. (ஐ-3-7)

# ஸ்கந்தா வீரன் நிஷாகரன் மூன்று சதங்களை அடித்தார்



வலி.வடக்கு,மார்ச்19

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வலதுகை ஆட்டக்காரரான குணபாலசிங்கம் நிஷாகரன் இவ்வாண்டில் இதுவரை நடந்த ஆட்டங்களில் 3 சதங்களும் ஓர் அரைச் சதமும் அடித்துத் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாண்டில் இடம்பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியுடனான ஆட்டத்தில் 145 ஓட்டங்களையும் -

யாழ். மத்திய கல்லூரியுடனான ஆட்டத்தில் 150 ஓட்டங்களையும் -

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியுடனான ஆட்டத்தில் 118 ஓட்டங்களையும் - பெற்று 3 சதங்களை அடித்துள்ளார்.

அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரியுடனான ஆட்டத்தில் 50 ஓட்டங்களைப் பெற்று அரைச்சதம் எடுத்ததுடன், மகாஜனாக் கல்லூரியுடனான ஆட்டத்தில் 49 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவ்வாண்டு இதுவரை இடம்பெற்ற 8 போட்டிகளில் 600 ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ளார்.

இதேவேளை -

இவர் 2002 ஆம் ஆண்டிலிருந்து யாழ்.மாவட்டத் தெரிவு அணிகளிலும் இடம்பெற்று வருகின்றார். வலதுகை ஆட்டக்காரனான நிஷாகரன் வலதுகை சுழல்பந்து வீச்சாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் மு.நடராசாவின் வழிகாட்டலின் கீழ் மு.குமரகுருபரனின் பயிற்சியின் கீழ் இவர் விளையாடி வருகின்றார்.

இவரது சாதனை வரிசையில் கடந்த ஆண்டில் 17 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியுடனான ஆட்டத்தில் முதலாவது சதமான 138 ஓட்டங்களையும் - சென்.ஜோன்ஸ் கல்லூரியுடனான ஆட்டத்தில் 61 ஓட்டங்களையும் -

மானிப்பாய் இந்துக் கல்லூரியுடனான ஆட்டத்தில் 53 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

2003ஆம் ஆண்டில் 15 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியுடனான ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 96 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற அணிகளுக்கான பயிற்சி முகாம்களுக்கும் நிஷாகரன் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகளையும் பெற்றுள்ளார்.(3-86-202)

# சென். பற்றிக்ஸ்-யாழ்ப்பாணக் கல்லூரி ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் இன்று

ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்துக்கான 17 ஆவது மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட - சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் கிரிக்கெட் ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 11 போட்டிகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரி 5 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

இம்முறை சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு ஜே.சுரேனும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எஸ்.தனாரனும் தலைமை தாங்குகின்றனர்.

இப்போட்டியின் நேர்முக வர்ணனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் நாடுபூராகவும் கேட்கக்கூடியதாக சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர். வண.பிதா ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் ஏற்பாடு செய்துள்ளார். (3)

## சிறப்புற நடைபெற்ற மெய்வன்மைப் போட்டி

பரந்தன்,மார்ச்19

வசுவமடு மகா வித்தியாலயத்தின் மெய்வன்மைப்போட்டி அண்மையில் சிறப்புற நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஐ.கே. தவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுக்கான விளையாட்டுக்கள் நடைபெற்றன. தொடர்ந்து கருத்துரைகளும், பரிசளிப்பும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-352-204)

# விறுவிறுப்பாக அமைந்த நவசக்தி-எ.எல். அணிகள் மோதல்

வலி.வடக்கு,மார்ச்19

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். பிரிவின் ஆதரவிலும் உதயனின் அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த நவசக்தி விளையாட்டுக்கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த எ.எல் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டம் முடிவடையும் போது நவசக்தி விளையாட்டுக் கழகம் ஒரு கோலை மட்டும் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இக்கோலை சர்வேஸ்வரன் தனக்குக் கிடைத்த பந்தைச் சரியான முறையில் முன்நகர்த்திப் பெற்றார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் மேலும் மூன்று கோல்களை நவசக்தி விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.

இதேவேளை -

எ.எல். விளையாட்டுக் கழகம் தனக்கு தண்டனை உதை மூலம் கிடைத்த உதையொன்றை நல்ல முறையில் பயன்படுத்தி தயானந்தன் ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார்.

நவசக்தி விளையாட்டுக் கழகம் இரண்டாவது பாதி ஆட்டத்தில் ரஜனிகாந், ராஜ்குமார் ஆகியோர் மேலும் இரண்டு கோல்களைப பெற்ற நிலையில் எ.எல். விளையாட்டுக் கழகம் தனது நேரில் உதை மூலமான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது.

ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் வேளையில் ரஜனிகாந் தனது அணிக்கான நான்காவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

எ.எல்விளையாட்டுக் கழகம் தனக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறியதைப் போன்று நவசக்தி விளையாட்டுக்கழகமும் சில இலகுவான வாய்ப்புக்களைத் தவறவிட்டமையும் சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

இரண்டாவது ஆட்டத்திற்கான பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் சமுகம்கொடுக்காமையினால் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கலைவாணி வி.க இரண்டாம் சுற்றுக்கு விளையாட தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (3-86)



நவசக்தி விளையாட்டுக்கழக வீரர்களும் எ.எல் விளையாட்டுக் கழக வீரர்களும் மோதிக்கொள்ளும் காட்சி. (படம் : நேசன்)

உதயன் அனுசரணையுடனான

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம் நாமகள்-சென்.மைக்கல் இன்று மோதல்

யாழ்ப்பாணம்,மார்ச்19

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்காகத் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த நாமகள் வி.கவும், யாழ்.லீக்கைச் சேர்ந்த சென்.மைக்கல் வி.கவும் இன்று மோதுகின்றன.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் மற்றோர் ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானகலா வி.கவும், பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த றேஞ்சஸ்ஸ் வி.கவும் மோதுகின்றன. (3-86-190-203)

விளையாட்டு

# போக்குவரத்துச் சபையின் உதைபந்தாட்டப் போட்டி

## மாத இறுதியில் கொழும்பில் நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்19

இலங்கை போக்குவரத்து சபை வருடாவருடம் மத்திய போக்குவரத்து சபை, பிராந்திய போக்குவரத்து சபை, கொத்தணி பஸ் கம்பனி ஆகியவற்றுக்கு இடையில் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாத இறுதியில் கொழும்பு நாரகேன்பிட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் வடபிராந்திய போக்குவரத்து சபை அணி பங்குபற்றவுள்ளது என வடபிராந்திய போக்குவரத்து சபையின் விளையாட்டுக் கழக தலைவர் முருகநேசன் தெரிவித்தார். (3-190)

## திரேசா இல்லம் முதலிடம்

யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் றோ.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் திரேசா இல்லம் 249 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை வென்றுள்ளது.

ஏனைய இல்லங்களான யோசேப இல்லம் 220 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், மரியாள் இல்லம் 200 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன் தலைமையில் மெய்வன்மை நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராசா பிரதம விருந்தினராகவும், யாழ்புனித மரியன்னை பேராலயப் பங்குத் தந்தை வண.பிதா கலாநிதி மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (3-51-203)

# கைலாசபதி கலையரங்கில் நாளை சம்பந்தன் விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம்,மார்ச்19

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவான சம்பந்தன் விருது வழங்கும் நிகழ்வும இரு நூல்களின் வெளியீட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங் கில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வரவேற்புரையினை கலாநிதி க.குணராசாவும் நினைவுரையினை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும் நிகழ்த்துவர்.

எழுத்தாளர் சம்பந்தன் எழுதிய 'துறவு', குமாரசாமி சத்தியபாமா எழுதிய 'சைவத் திருமுறைப் பதப்பொருள் அகராதி' ஆகிய இரு நூல்களே நாளை வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கான வெளியீட்டுரையை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார்.

துறவு நூலின் முதற்பிரதியை பூரணி கிருபானந்தனும், பதப்பொருள் அகராதி நூலின் முதற்பிரதியை ச.தங்கமயிலோனும் பெற்றுக் கொள்வர்.

தொடர்ந்து 2004ஆம் ஆண்டுக்கான சம்பந்தன் விருதுபெறும் பேராசிரியர் சி.மௌனகுருவுக்கான அறிமுகவுரையினை கலாநிதி குணராசாவும் வாழ்த்துரையினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸும் நிகழ்த்துவர். (எ-13)


## வேலைக்கு ஆள் தேவை

வேலைக்கு ஆள்கள் இருவர் தேவை. 40வயதிற்கு மேற்பட்டவராகவும் ஆங்கிலத்தில் அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். ஓய்வூதியம் பெறுபவர்களாக இருந்தால்விரும்பத்தக்கது. "பாட்ஸ்" விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகொள்ள விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்:

**சன்னதி முருகன் லேக் சொப் அன் சேவிஸ்**
*241, பருத்தித்துறை வீதி,*
*வீரமாகாளி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம்.*
(சி.41571)



## இலவச நீரிழிவுப் பரிசோதனையும் சிகிச்சையும்

அன்னை நாகா பூட் சிற்றியின் இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி ஹேமாஸ் பார்மஸியூட் - டிக்கல்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

**இடம் : அன்னை நாகாபூட் சிற்றி**
**காலம் : 21-03-2005 திங்கள்**
**மு.ப 9 முதல் 12 மணிவரை**

ஆர்வமுள்ளவர்கள் முற்பதிவுகளை மேற்கொண்டு கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்

(C-41563) (53-)


## லயன்ஸ் கழக ஒன்றுகூடல்

தென்மராட்சி,மார்ச்19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.கன்னாதிட்டி ஒழுங்கையில் உள்ள யாழ். பிராந்திய லயன்ஸ் கழகச் செயலகததில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் லயன் சிவானந்தனும் கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜும் கலந்துகொள்வர்.

லயன்ஸ் கழகத்தின் 306 பி 1 மாவட்ட உப ஆளுநர் பதவிக்கு லயன் கே.ஸி.முத்துக்குமாரசுவாமி போட்டியிடும் அறிவிப்பு இந்த ஒன்று கூடலில் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-3-117)

## மிதிவெடி வெடித்து ஒருவர் காயம்


யாழ்ப்பாணம்,மார்ச்19

தோட்ட நிலத்தைக் கொத்திக் கொண்டிருந்த வேளை மண்வெட்டியில் சிக்கிய மிதிவெடி வெடித்துச் சிதறியதில் ஒருவர் கண், கை, கால்களில் காயங்களுக்குள்ளானார்.

உரும்பிராய் கிழக்கில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்தவரான வேலன் முத்துத்தம்பி (வயது 57) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 22 - 04 - 1931

உதிர்வு 17 - 02 - 2005

அமரர் **இராசதுரை தம்பிரத்தினம்** (Retd.A.M.P)

17.02.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் 31ஆம நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.03.2005) சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும். அத்தருணம் வருகைதந்து இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து வரும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*34/1,கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (43260)(42-14-46)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சர்வேஸ்வரியம்மாஇராஜநாயகம்

கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சர்வேஸ்வரியம்மா இராஜநாயகம் 16.03.2005 புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை இராஜநாயகம் (TEA MAKER, பதுளை) அவர்களின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (U.K), குலேந்திரன் (B.G-Lodge, கொழும்பு), இராஜேந்திரன் (டென்மார்க்), பாலேந்திரன் (ஜேர்மனி), சுபாசினி சிவசோதிராஜா (சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவசோதிராஜா (ஓய்வுபெற்ற P.W.D உத்தியோகத்தர்), இந்திரமனோகரி, விஜயகுமாரி, ஜோய்கிறேஸ், செல்வகுமாரி (சித்ரா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜிதரன், கிரிசாந்தன், துஷிந்தன், அன்ட்ரூ, அலன், பிரியங்கா, ஆர்த்திக், அஜீஸ், அஜன், சிவகிரிபன் (கிருபா), சிவதுக்ஷன், சிவகஜனி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.03.2005 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மாலை 5.00 மணியளவில் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் மத்தி,*
*சண்டிலிப்பாய்.* (43270)(32-14-46-42)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

## நீண்டகாலமாக திருத்தப்படாத வீதி

சுழிபுரம்,மார்ச்19

தொல்புரம் கிழக்கில் வட்டு.வடக்கு வயல்வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமையால் வீதியில் பாரிய குன்றும் குழிகளும் காணப்படுகின்றன. இதனால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மழை காலங்களில் இவ்வீதி குளம் போன்று தோற்றமளிக்கும். மழை வெள்ளம் வற்றினாலும் இவ்வீதியால் செல்லமுடியாது. வீதி சேறும் சகதியுமாகக் காணப்படும்.

உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து அவ்வீதியைப் புனரமைப்புச் செய்து மக்களின் பயன்பாட்டிற்கு விடவேண்டும் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-28-203)

## உடன் பிறந்தவள் பிரிந்திட்ட 31ஆம் நாள் நினைவில்..



மனங்கள் மகிழ 31-09-1964

மனங்கள் கலங்க 17-02-2005

பத்துத்தினங்கள் மூன்று
கடக்க உன் நினைவுகள்
சுமந்து வாடுகின்றோம்
குட்டியக்கா
பாடையில் நீ வந்த
கோல நிலை மனதில்வர
பதைத்து எம்மனம்
துடிக்குதே
குட்டியக்கா.
பாதியில் உன் வாழ்வு
சிதைத்தோன் காலன்
கலங்கித் துடிப்பான்
கவலையின்றி சாந்திபெறு
குட்டியக்கா
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பருத்தித்துறை ஓடக்கரையில் வாழ்ந்த அமரர் திரு. திருமதி சின்னத்துரை தம்பதிகளின் புதல்வி மனிதம் குன்றா மாமகள்

அமரர் **பற்குணலட்சுமி (ரஞ்சா)**

*தீசன் ஆட்ஸ், கிளிநொச்சி*

திரு. திருமதி சிவராமதீசன் குடும்பத்தினர்.

(சி-41572)(42-14-46)

## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7679632 முதல் 7691859 வரை
சீட்டிழுப்பு இல. 118 திகதி 17-3-2005

வெற்றி எண்கள் **2 6 6 9 2 3** சுப்பர் எண் **26**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,09,71,050/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,12,73,650/- | - |
| இ-த பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இ-த பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இ-த பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 5,000/- | 5,45,000/- |
| இ-த பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,081 | 500/- | 5,40,500/- |
| இ-த பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,823 | 50/- | 5,41,150/- |
| இ-த பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 107,251 | 10/- | 10,72,510/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 9 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 1,000/- | 1,13,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,081 | 100/- | 1,08,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,723 | 20/- | 2,14,460/- |
| மொத்தம் | 131,210 | | 53,32,320/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,32,320/-

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,15,74,575/-**

7691117-3-17
7691341-3-22
7683833-8-59
7688930-9-97
7683917-4-33
7685194-4-97
7689149-0-12
7685444-5-81

அபிவிருத்தி லொத்தர் சபை


## ஈழவாணியின் சுயதொழில் வாய்ப்புக்கான வேலைத் திட்டம்

யாழ்.மாவட்டத்தின் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் சுயவிற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☆ விண்ணப்பதாரிகள் சொந்தக் கையெழுத்தில் சுயவிவரங்கள், கிராம சேவையாளர் பிரிவு, உதவிஅரசாங்க அதிபர்பிரிவு, சரியான முகவரியுடன் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

☆ கல்வித் தகைமை அவசியமில்லை. மாதாந்தம் உங்கள் முயற்சியால் 7,500 ரூபாவுக்கு மேல் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு

☆ முடிவு திகதி: 25.03.2005

அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.
**நிர்வாக இயக்குநர்,**
**ஈழவாணி சுயதொழில் நிறுவனம்,**
இல.111, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

☆ நேர்முகத்தேர்வு பற்றிய விவரங்கள் உதயன் மூலமாக அறிவிக்கப்படும்.

விளம்பர இணைப்பாளர்கள்: **ரகுப்பிரியா அட்வடைசிங் சேர்விஸ்.** (43262)(42-14-46)

# பாதிக்கப்பட்ட உயர்தர மாணவருக்கு கெயர் நிறுவனம் உதவி வழங்குகிறது

புதுக்குடியிருப்பு,மார்ச்19

முல்லைத்தீவில் சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு 'கெயர்' நிறுவனம் உதவிகளை வழங்கி வருகின்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களுக்கான பாடப் புத்தகங்கள், பாடக்குறிப்புகள், சிறு குறிப்புப் பாடத்திட்டம், கொப்பிகள், எழுதுகருவிகள் போன்றவற்றை இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது.

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட 101 உயர்தர வகுப்பு மாணவர்களில் 90 பேர் பாடசாலைகளுக்கு மீண்டும் சென்று தமது கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர். ஏனைய 11 பேர் நலன்புரி நிலையங்களில் இருந்து தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், இவர்களது பிரத்தியேகக் கல்விககாக ஒரு பாடத்திற்கு 90 ரூபா வீதம் மூன்று பாடங்களுக்கு மூன்று மாதத்திற்கான கொடுப்பனவாக 810 ரூபாவையும் - போக்குவரத்துச் செலவுக்கென நாள் ஒன்றுக்கு 35 ரூபா வீதம் மாதத்தில் 25 நாள்கள் என்ற கணக்கில் மூன்று மாதத்திற்கு 2 ஆயிரத்து 625 ரூபாவுமாக மொத்தம் 3 ஆயிரத்து 435 ரூபா இந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் இரவு நேரங்களில் கல்வியைக் கற்பதற்கு மின்சாரம், கற்றலுக்கான பொது இடங்கள் போன்றன ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மகாவித்தியாலயம், செம்மலை மகாவித்தியாலயம், அம்பலன் பொக்கணை மகாவித்தியாலயம், குமுழமுனை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (8-353-203)

## உரிமத்துக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

புதுக்குடியிருப்பு,மார்ச்19

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உணவு நிலையங்களை, இவ்வாண்டுக்கான உரிமத்துக்கு விண்ணப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ சுகாதாரச் சேவையினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ சுகாதாரச் சேவையின் மாவட்ட அலுவலகத்தில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்பொருள் வாணிபம், தேநீர்ச்சாலை, வெதுப்பகம் ஆகியவற்றின் உரிமையாளர்களையே உரிமத்துக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (8)

## கண் சத்திர சிகிச்சை திங்கள் வரை இடம்பெறும்

புதுக்குடியிருப்பு,மார்ச்19

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் இங்கிலாந்து கண்சிகிச்சை நிபுணர்களால் நடத்தப்பட்டுவரும் கண் 'கற்றாக்' சத்திர சிகிச்சை எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சி.சிவபாலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தச் சிகிச்சை இன்று சனிக்கிழமை வரை நீடிப்பதாக முன்னர் அறிவித்திருந்தோம். எனினும், அநேக நோயாளர்களின் வேண்டுகோளையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை மேலும் நீடிக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (8)




புளியம்பொக்கணைச் சந்திக்கு அருகில் உலக தரிசனம் (World Vision) நிறுவனத்தின் நிதியுதவியுடன் 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நெற்களஞ்சியத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திறந்துவைப்பதையும் அருகில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் சி.கரிகாலன் நிற்பதையும், திறந்து வைக்கப்பட்ட களஞ்சியத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (8-352)

## சிலாவத்தைப் பகுதியில் முன்பள்ளி திறந்து வைப்பு

ஒட்டுசுட்டான்,மார்ச்19

சிலாவத்தை தற்காலிக வீட்டுத் திட்டப் பகுதியில் முன்பள்ளி ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி மேம்பாடு கருதியே இந்த முன்பள்ளி திறந்துவைக்கப்பட்டது.

தமிழீழ நிர்வாக சேவையின் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இந்த முன்பள்ளியின் திறப்பு விழா தமிழீழ நிர்வாக சேவையைச சேர்ந்த கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை முல்லைதீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுபபாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார். முன்பள்ளிக் கட்டடத்தை ஜேர்மன் அக்றோ அக்சன் நிறுவனத் தலைவி நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

நிகழ்வில் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனப் பொறுப்பாளர் சுட்டா, தமிழீழ நிர்வாக சேவை நடுவப் பணியகப் பொறுப்பாளர் சின்னப்பா மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வைத்து முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (8-341-202)

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் ஒட்டுசுட்டான் பகுதி மக்கள் கஷ்டம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பல குறைபாடுகள் நிலவுகின்றன என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம், பொதுநோக்கு மண்டபம், பற்சிகிச்சை நிலையம் என்பவை அமைக்கப்படவேண்டிய தேவையிருந்தும் இதுவரை அவை அமைக்கப்படவில்லை. அத்துடன், இப்பிரதேசத்திற்கு மலசலகூட மானியங்களும் வழங்கப்படுவதில்லை.

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதி மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்திலும் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, தற்போதைய வெப்பநிலை காரணமாக நாய்களுக்கு விசர்நோய் ஏற்படுகின்றது. இந்நிலையில், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (3-341-202)




## பாதிக்கப்பட்ட மாணவருக்கான உதவிகள்

கிளிநொச்சி,மார்ச்19

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இரட்சணியசேனை நிறுவனத்தினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளின் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு அண்மையில் செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 200 மாணவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், பாதிக்கப்பட்ட 11 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களான கரம் போட், உதைபந்து, துடுப்பாட்டத் தொகுதிப் பொருள்கள், கரபந்துத் தொகுதிப் பொருள்கள், வலைப்பந்துத் தொகுதிப் பொருள்கள் அத்துடன் கற்பித்தல் செயற்பாட்டிற்கான வெண்பலகை எழுது பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ச.எழிலன்பன், வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மூவேந்தன், இரட்சணியசேனை நிறுவனப் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அதிபர்கள, ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (8-203)

☆ ☆ ☆

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், ஆழியவளை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த பத்து மாணவர்களுக்குத் தமிழீழ மாணவர் அமைப்பினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி வடமராட்சி கிழக்குத் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் நிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மூவேந்தர் மாணவர்களுக்கான சைக்கிள்களை வழங்கினார். (8-203)

☆ ☆ ☆

கிளிநொச்சி,மார்ச்19

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆழியவளை மகாவித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

'றீடோ' நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழீழ மாணவர் அமைப்பினர் இந்த வகுப்புகளை ஒழுங்கமைப்புச் செய்து நடத்திவருகின்றனர்.(8-203)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அடிக்கல்

முல்லைத்தீவில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது.

இந்தக் கட்டடப்பணிக்கான நிதியுதவியை டபிள்யூ.யு.எஸ்.சி.நிறுவனம், யப்பான் ரெக் ஆகியன வழங்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டப் பொருண்மிய மதியுரையக இணை[illegible]ாளர் வை.விமலேந்திரன் தலைமையில்நடைபெற்ற இந்த வைபவத்தில் மங்கள விளக்கினை முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் க.சிவனடியார், வைத்திய கலாநிதி தர்மேந்திரா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார். முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.யு.எஸ்.சி.நிறுவனப் பிரதிநிதி எஸ்.சீலன, முல்லைத்தீவு மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி மூர்த்தி, பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் ஆகியோர் இணைந்து கல்லூரிக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். (8-352)

# புதுக்குடியிருப்புச் சந்தையில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

புதுக்குடியிருப்பு,மார்ச்19

புதுக்குடியிருப்பு சந்தையில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

பயிற்றங்காய் கிலோ 20 ரூபாவாகவும், பீர்றூட் கிலோ 30 ரூபாவாகவும் கரட் கிலோ 40 ரூபாவாகவும் கத்தரிக்காய். கிலோ 15 ரூபாவாகவும் வாழைக்காய் கிலோ 25 ரூபாவாகவும் தககாளிப்பழம் கிலோ 45 ரூபாவாகவும் உருளைகிழங்கு கிலோ 50 ரூபாவாகவும் பூசனிக்காய் கிலோ 25 ரூபாவாகவும் புடோல் கிலோ 18 ரூபாவாகவும் கறிமிளகாய் கிலோ 40 ரூபாவாகவும் கோவா கிலோ 25 ரூபாவாகவும் மரவள்ளிக்கிழங்கு கிலோ 15 ரூபாவாகவும் வெங்காயம் கிலோ 20 ரூபாவாகவும் விற்பனை செயயப்பட்டு வருகின்றன.

சுனாமி அனர்த்தத்தின் பின் மக்கள் கடலுணவுகளைத் தவிர்த்து வந்தனர்.

மரக்கறிகள் வேறு பிரதேசங்களிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்யப்பட்டன. இதனால், உள்ளூர் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கடலுணவுகள் மீது மக்கள் நாட்டம் கொண்டுவருகின்றனர். இதனால், மரக்கறிகளின்விலை குறைவடைந்துள்ளது.(8-353-204)

## பிரதான வீதிகள் திருத்தப்படவில்லை

கிளிநொச்சி,மார்ச்19

கிளிநொச்சியிலிருந்து திருநகர், ஜெயந்திநருக்குச் செல்லும் பிரதான வீதி சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களை அடைகின்றனர்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாகத் திருததப்படாது காணப்படும் இவ்வீதியில், மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இவ்வீதியின் திருத்தவேலை குறித்து பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் இதுவிடயத்தில் அதிகாரிகள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-301-204)



அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் அமைந்துள்ள தமிழீழக் காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவுக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். (8)

## டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

புதுக்குடியிருப்பு,மார்ச்19

முல்லைத்தீவு தேசியக் கல்வி நிறுவகம் நடத்தவுள்ள டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள இக்கற்கைநெறிக்கு இதுவரை கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணபிக்க விரும்புவோர், விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல் என்பவற்றை தேசியக கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவனுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (8-353-204)

GAMA ABACUS

இப்பொழுது நிலவு.com அறிமுகப்படுத்துகிறது




பெற்றோர்களுக்கான விஷேட

**கருத்தரங்கு**

**அழைப்பு**

காலம் : இன்று (19-03-2005)
பி.ப. 3.00 மணி

இடம் : யாழ்•இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

விரிவுரையாளர்: திரு.க. நகுலநாதன்
திரிசூர், கேரளா, இந்தியா

**ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

**உங்கள் குழந்தைகளைக் கணித மேதைகளாக்குகிறோம்**

## GAMA ABACUS + நிலவு.com

# அபாக்கஸ் பயிற்சி # மனக்கணக்கு # ஞாபகக்கலை

இம்மூன்று பயிற்சியும் ஒன்று சேர்த்துத் தரும் உலகிலேயே மிகப்பிரபலமான ஒரே ஒரு நிறுவனம் இப்பொழுது உங்களுக்காக யாழ்ப்பாணத்தில்....

**4 வயது முதல் 14 வயது வரையான குழந்தைகளின் மூளை விருத்தி மற்றும் சிந்தனைத்திறன் என்பவற்றினை மேன்மைப்படுத்த ஒரு செயற்பாடு மூலமான பயிற்சி முறைதான் அபாக்கஸ்.**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று சித்திபெற நாங்கள் உத்தரவாதம் தருகிறோம்.

**இவ்வாறானதோர் உறுதிமொழியை எம்மால் மட்டுமே தரமுடியும்.**

ISO தரச் சான்றிதழ்கள் - தனிப்பட்ட கவனிப்பு - பெற்றோர்களுக்கான விஷேட பயிற்சி

பயிற்சி நிலையங்கள்

நிலவு.com, 275, யாழ். வீதி, மானிப்பாய். T.P : 0777 740 413
Focus, 120, அரசடி வீதி, யாழ்ப்பாணம். T.P : 0714 801 391

வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, கொட்டகேனா, நுவரெலியா, வவுனியா, கிளிநொச்சி, றாகெல.

யாழ்ப்பாணம், இலங்கையின் பிறபாகங்கள் மற்றும் வெளிநாடுகள் அனைத்திலும் பயிற்சி நிலையங்கள் அமைக்க ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளலாம்.

**India :** West Ford, Thrissur, Pin - 680 004, Kerala, India Tel: 0091 487 3090908
web : www.gamaacademy.com e m@il : mail@gamaacademy.com

**Gama Mental Arithmetic Lanka Pvt. Ltd.** **Administrative Office:** 385, 2/1, J.T Complex Galle Road, Colombo 06. T.P : 0112 506819
**Regional Office:** Nilavu.com, 275, Jaffna Road, Manipay, Jaffna. T.P: 0777 769751

**GAMA MENTAL ARITHMETIC EDUCATION Head Quarters in Other Countries**

**Australia** 1/64, Alt Street, Ashfield, Sydney, 2131 Tel: 0011-61-2-97990986, 0011-61-0416147737
**Dubai** 107, Ali Khalifa Bin Beleshia Bldg., Karma, Dubai. Tel: 00971503571236
**England** 72, Grand Avenue, Berry Land, Surbitonh, Surrey, Kt5 9HX, England. Tel: 044 795 6234588
**Bahrain** Box No. 21485, Manama, Bahrain. Tel: 00973 39295150
**Italy** Via - F-Labia-9, Palazzo: 10, Rome-00168, Italy Tel: 003906 6234588
**India** West Ford, Thrissur, Pin - 680 004, Kerala, India Tel: 0091 487 3090908
**Malayasia** Section-5/383, Petaling Garden, Kuala Lampur, Malaysia.
**Nepal** Bhaira Hawa, Lumbini Zone, Nepal. Tel: 007771521318
**Oman** Bldg. No: 1461, Rado Market Bldg. Ruwi High Street, Ruwi Sultanate of Oman. Tel: 00968 - 790858/70085, Fax:783858

# சுடர் ஒளி

THE SUDAR OLI ஸுடர் இளி வார மலர்

மார்ச் 20-26, 2005 இதழ்




இப்பொழுது உங்களது முகவர்களிடம் பரபரப்பான விற்பனையில்.....



ஓம் சக்தி

## காரைநகர் மணற்காடு
## அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியம்மன் ஆலயம்
## தாரண வருட பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

ஆதி சேஷத்திரமாகிய காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியம்பாளின் வருடாந்த பிரம்மோற்சவம் நிகழும் தாரண வருடம் பங்குனி மாதம் 12ஆம் நாள் (25.03.2005) வெள்ளிக் கிழமை பகல் 12.05 மணிக்கு துவஜாரோகணத்துடன் ஆரம்ப மாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் சிறப்பாக நடைபெறும். அடியார்கள் ஆசாரசீலர்களாக வந்து அம்பிகையின் திருவருளைப பெற்றுய்வார்களாக.

### கிரியாகால நிகழ்வுகள்

25.03.2005 பங்குனி மீ 12 உ வெள்ளிக்கிழமை - பகல் 12.05 மணி துவஜாரோகணம் நவசந்தி ஆவாகனம்.
05.04.2005 பங்குனி மீ 23 உ செவ்வாய்க்கிழமை - மிருக யாத்திரை (வேட்டைத் திருவிழா) பி.ப. 3.00 மணிக்கு அம்பாள் வேட்டைக்குப் புறப்படுதல்.
06.04.2005 பங்குனி மீ 24 உ புதன்கிழமை - இரவு பெரிய சப்பரம், பி.பகல் 1.30 மணிக்கு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்
07.04.2005 பங்குனி மீ 25 உ வியாழக்கிழமை - ரதோற்சவம் காலை 10.30 மணிக்கு
08.04.2005 பங்குனி மீ 26 உ வெள்ளிக்கிழமை - காலை 10.30 திருக்குளத்தில் தீர்த்தவாரி, இரவு 7.00 மணிக்கு துவஜா அவரோகணம்.
12.04.2005 பங்குனி மீ 30 உ செவ்வாய்க்கிழமை - வேள்வி (வருடாந்தப் பெங்கல் நடைபெறும்.)

வே.நடராஜா,
ஆலயப் பெறுநர்.

(43281)(33-22-11-45)


உ

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன் - மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு, கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம் - கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது.

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No. 5, Pillaiyar Inn,**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839 Mobile: 0776 923623.

(சி-41558)(33-11-45)


உ
ஓம் முருகா
உரும்பிராய்
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்

### 2005 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகாசபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் தாரண வருடம் பங்குனி மாதம் 7ஆம் நாள் நாளை (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நிகழும்.

தயவுசெய்து தவறாது சமுகந்தரவும்.

அ.நவரத்தினம்
தலைவர்

திருமதி ச.தங்கராசா,
ந.கணேசலிங்கம்
இணைச் செயலாளர்கள்

(C/43275) (22-14-17)


**YARL MOBILES வழங்கும் மற்றுமொரு MOBITEL G.S.M. வெளியீடு**

**Totaly Incoming Free**

அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்!

**300 Package**

**YARL MOBILES (PVT) Ltd.**
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி, யாழ்.
Hot Line 071 4168410, 071 4168412
071 4168424

(43285) (22-11-45)


## சமயதீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 19

வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் இலவசமாக சமயதீட்சை வழங்கப்படவுள்ளது.

சிவஸ்ரீ கை.திருஞானசம்பந்தக் குருக்களினால் நடத்தப்படவுள்ள இந்நிகழ்வில் விரும்புபவர்கள் தீட்சை பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது. (த-203)


**திருமணக் கார்**

குளிரூட்டப்பட்ட கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0777 - 747095
0776 - 258204

(சி-41585)(11-45)

**திருமணக் கார்**

குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: இல. 396,
கைலாயபிள்ளையார் கோயிலடி,
உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777 283795.

(சி/41333)

மனைக்கு வெளியே ஒரு மனை!
ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா**
உங்களுக்காக விசேட ஆக்கம்!
★ JOE சிக்கன் புரியாணி
★ குங்குமப்பூ சிக்கன் புரியாணி
வழமைபோல உணவுப் பொதிகள்
காலை 10 மணி - மாலை 3 மணி வரை.
உடன் விரையுங்கள்!
**ஜெசித்தாரா**
உங்கள் உணவகம்
19/3, மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 7227

(C/41576) (22-14-17)


## விற்பனையாளர், கணக்குப் பதியுநர் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் விற்பனை நிறுவனத்திற்கு

1. விற்பனையாளர்கள்
2. கணக்குப் பதியுநர்/சிட்டை எழுதுநர்

தேவை. ஆண், பெண் இருபாலாரும் சொந்தக் கையெழுத்திலான சுயவிவரத்துடன் கீழ்வரும முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல. 2535,
மே/பா உதயன்.

(43269) (46-14-42)


**நிரஞ்சனாஸ் சங்கானை**
விஜய், சங்கவி, சுபலட்சுமி நடித்த
**நிலாவே வா**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பு.நே.)
(C/41877)(29-16-17)

**நாதன்ஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது. யாழ்ப்பாணம்.
கா.நே. 10.30 (பு.நே) மட்டும் விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ் நடித்த
**கில்லி**
கா.நே. 2.30, 6.30, 9.30 (பு.நே.) ஸ்ரீகாந், பூமிகா நடித்த
**ரோஜாக்கூட்டம்**
21.03.2005 முதல் **The Passion of the Christ**
(இயேசு நாதரின் கதை)
(C/41486) (22-11-46)

**ராஜா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
**லண்டன்**
இயக்கம்: சுந்தர் C
(சீல்ஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)
(C/41381)(29-16-17)

**லக்ஷ்மி சினிமா இணுவில்**
இன்றுமுதல் ரவி, அஸின், நதியா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
**M.குமரன்**
சண் ஓவ் மகாலக்சுமி
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00.
(43250)(29-16-17)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
அனேகரின் வேண்டுகோளுங்கிணங்க
சரத்குமார், நமிதா, வடிவேல், கபாலி நடித்த



**ஏய்**
(சீல்ஸ்)
தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே)
(C/41380)(29-16-17)

**மனோகரா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஆர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்) மற்றும் பலர் நடித்த
**மாயாவி**
(சீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
(C/41378)(29-16-17)


## செயலமர்வுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (த-117)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவரான

### சண்முகநாதன் வைத்தியநாதன்

அவர்கள் 16.03.2005 இல் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

லண்டன்.

ஸ்ரீபதி அம்பாள், பார்வதி
ஸ்ரீதரன், ஜெயச்சந்திரன்.

(43273)(22-14-17)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 17.02.2005 இல் இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் கதிரேசு கருணானந்தராசா
(மெக்கானிக் கருணா)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகியன இன்று (19.03.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன. ஆகவே இந்த நிகழ்வுகளில் கலந்து அமரரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

குலதீஸ்வரன்,
ஜெகதீஸ்வரன்.

(43279)(22-11-45)

## மரண அறிவித்தல்கள்

### செல்வவிநாயகமூர்த்தி சிவலிங்கம்
(ஓய்வுபெற்ற கணக்காளர், யாழ். போதனா வைத்தியசாலை)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்துவந்தவருமாகிய செல்வவிநாயக மூர்த்தி சிவலிங்கம் 18.03.2005 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற தபாலதிபர் ஆறுமுகம் - சிவயோகம் தம்பதிகளின் கனிஷ்ட மருமகனும் மீனலோஜினிதேவியின் அன்புக் கணவரும் காஞ்சனா(அமெரிக்கா), பிரதாபன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செந்தில் முருகன்(அமெரிக்கா), நிலானி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மஞ்சரியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில்.

தகவல்:
றணித்தா தெட்சணாமூர்த்தி
(பெறாமகள்).

(43274)(22-14-17)

### மாணிக்கம் கிருஸ்ணபிள்ளை

மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கிருஸ்ணபிள்ளை நேற்று (18.03.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் பூமணியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், செல்லத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசந்தாதேவி, இராசகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
செ.வசீகரன்
(பெறாமகன்).

(43277)(35-22-11-45)

### கார்த்திகேசு தம்பிப்பிள்ளை



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு தம்பிப்பிள்ளை 17.03.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் சிவராசா (கனடா), இராசமணி (கனடா), மகேஸவரி, நாகேஸ்வரி (நவில் பாடசாலை ஆசிரியர்), இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, சிவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யோகராசா (கனடா), கந்தசாமி, வீரசிங்கம், செல்வராசா (கனடா), நவராசா(கனடா), காலஞ்சென்ற சுதன் (கனடா), கமலராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

தகவல்:
மு.வீரசிங்கம்
(மருமகன்)

(43282)(22-11-45)

## மட்டக்களப்பில் சூடு; இளைஞர் படுகாயம்!

கொழும்பு,மார்ச்19

மட்டக்களப்புப் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு நகருக்கு வெளியே வீச்சுக்கல்முனை என்னும் இடத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் மட்டக்களப்பு வைத்திய சாலையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பணிபுரிகின்ற ஜெயராஜா ராஜ்ீ (வயது 25) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

இவர் வேலை முடிந்து சைக்கிளில் வீடு திரும்பும்போது, இவரைப் பின்தொடர்ந்து வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்புப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மட்டக்களப்பு ஸ்ரீலங்கா விமானப்படை முகாம் அமைந்த பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(கு-12)

## மரண அறிவித்தல்கள்

### இராசமாணிக்கம் சிவச்செல்வம்

இன்பருட்டியைச் சேர்ந்த இராசமாணிக்கம் சிவச்செல்வம் நேற்று (18.03.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நீலாவதியின் அன்புக் கணவரும் சிவசக்தி, சிவநீலா, வளர்மதி, கிருஷ்ணப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் குலேந்திரன், குலசேகரம், ரவிச்சந்திரன், அரவிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வனிதாமணி, சந்திரலேகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.03.2005) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*இன்பருட்டி,*
*பருத்தித்துறை.* (சி-41591)(33-11-45) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி திலகவதி திருநாவுக்கரசு

நந்தாவில், களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 79, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி திருநாவுக்கரசு நேற்று (18.03.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற சட்டத்தரணி ஆறுமுகம் கனகசபை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபை திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் ரவீந்திரன், சிந்தனைச்செல்வி, மனோரஞ்சினி, கமலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகேஸ்வரி, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நாகம்மா சிதம்பரப்பிள்ளை, பொன்னம்மா இராமநாதன், சிவபாக்கியம் சண்முகம், பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*79, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (43290)(33-11-45) தகவல்: குடும்பத்தினர்.

### மாணிக்கம் சிவபாததுரை

கொக்குவில் மேற்கு, அரசடியைச் சேர்ந்தவரும் இல. 115, ஸ்ரீ கதிரேசன் வீதியில் வர்த்தகம் செய்தவருமாகிய மாணிக்கம் சிவபாததுரை நேற்று (18.03.2005) வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*அரசடி.* (43292)(33-11-45) தகவல்: மனைவி.

### சைமன் சிங்கோ கமலாம்பிகை



சபாபதிலேன், பிரம்படி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட சைமன் சிங்கோ கமலாம்பிகை நேற்று (18.03.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சைமன் சிங்கோவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சபாபதி லேன்,*
*பிரம்படி ஒழுங்கை,*
*கொக்குவில்.* (43293)(33-11-45) தகவல்: S.துரைசிங்கம் (மகன்)


யாழ். மக்களுக்கு விமானக் கட்டணத்தில் மீண்டும் விலை குறைப்பு

கொழும்பு ✻சென்னை ✻கொழும்பு

இச்சலுகை இம்மாதம் 31 ஆம் திகதி வரை

12,550/= மட்டுமே

இந்தியா சுற்றுலாவிற்கான ஓர் அரியவாய்ப்பு

✻இருவழி விமானச்சீட்டு

✻விமானநிலையம் - விடுதி, விடுதி - விமானநிலையம் போக்குவரத்து இலவசம்.

✻2 இரவு, 3 நாள்கள் தங்குமிடவசதி (காலை உணவு உட்பட) 21,000/=

எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ் பிறைவேற் லிமிட்டெட்

56/ 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

021-2223771, 0777915824,0777270452

E.mail : .itkenspencejf@sltnet.lk

தலைமைக் காரியாலயம் - 305, வொக்ஸ்கோல் வீதி, கொழும்பு -2

0112 308 308 EX: 4083 0777 287555

உங்கள் நம்பிக்கையான பிரயாண முகவர்


## ஜே.வி.பியின் பிரமுகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் கழிந்துள்ளபோதும் இதுவரை குறிப்பிடத் தக்க நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இந்த விசாரணைகளுக்கு என்ன நடந்தது? சம்பந்தப்பட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? - என்பன பற்றி இவ்வார முற்பகுதியில் அரச உயர் மட்டம் பொலீஸ் வட்டாரங்களையும், நீதித்துறை வட்டாரங்களையும் வினவியிருப்ப தாகத் தெரியவருகிறது.

இவ்வாறான சூழ்நிலையின் பின்னணியில் குறிப்பிட்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினருக்கெதிராக வெகுவிரைவில் பொலீஸ் நடவடிக்கைகள் எடுக்கப்படலாமென்று தெரி விக்கப்படுகிறது.

அரச உயர்பீடத்துக்கும் ஜே.வி.பி. தலைவர்களுக்கும் இடையிலான முறுகல்நிலை முற்றிவருவதை அடுத்தே, இவ்வாறு கிடப்பில் போடப்பட்ட பல விடயங்களைத் தூசு தட்டித் தூக்கியெடுத்து, தூக்கிப்பிடிக்க அரச உயர்மட்டம் முயலுவதாகக் கூறப்படுகின்றது. (கு-க)

## தியாக தீபம் அன்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகள் ஆரம்பமாகும். பொது இடங்களில் அன்னையின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு மலர்வணக்கம் இடம்பெறும். அடுத்தமாதம் 19ஆம் திகதிவரை கருத்தரங்குகள், சிரமதானம் என்பனவும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. இறுதி மூன்று நாள்களும் அடையாள உண்ணாவிரதங்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும்.

இதேவேளை - குடாநாட்டிலும் கிராமிய ரீதியாக அன்னை பூபதியின் நினைவான கருத்தரங் குகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர். (கு)

## சுமுகமான தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுப்பதற்காக ஐவர் கொண்ட நடவடிக்கைக் குழு தெரிவுசெய்யப்பட்டது.

பேரவை உறுப்பினர்களான வண. ஜெபநேசன், வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள், கே.இராஜதுரை, பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், பேராசிரியர் கே.கந்தசாமி ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர், உயர்கல்வி அமைச்சுச் செயலாளர் தாராடிமெல், கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், வைத்திய நிபுணர் கே.குணானந்தன் ஆகியோரை உள்ளடக்கிய கூட்டம் ஒன்றை மானிய ஆணைக்குழுவில் கூட்டி இந்த விவகாரத்துக்கு தீர்வு காண்பது தொடர்பாக ஆராயவிருப்பதாகவும் -

இக்கூட்டத்துக்கான ஏற்பாட்டைத் தான் மேற்கொள்வார் என்றும் துணைவேந்தர் தெரிவித்தார். (3)

## கிழக்கில் கடமையாற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியற் படுகொலைகள் குறித்து அமெரிக்கப் பிரஜைகள் கவனமாக இருக்கவேண்டும். அந்தப் பகுதிகளில் இடம்பெறும் அரசியல் நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்கப் பிரஜைகள் கேட்கப்படுகின்றனர். தனிப்பட்ட ரீதியில் தொண்டர்களாகக் கிழக்கில் கடமையாற்றுவோர் குறித்து அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது. நிவாரணத் திட்டங்களில் கடமையாற்றிவரும் அமெரிக்கப் பிரஜைகள் கொழும்பிலுள்ள தூதரகத்தில் தம்மைப்பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இப்படி அமெரிக்கத் தூதரகத்தின் அந்த அறிக் கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (கு-க-12)


தொழிற்பயிற்சி நெறிகள்

✻ RADIO, T.V AND VIDEO DECK REPAIRING

சகல இன ரேடியோ,ரீ.வீ,டெக் மற்றும் எலற்ரோனிக் உபகரணங்கள் Computer Monitor, Ups, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

✻ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING

சகல இன (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

✻ REFRIGERATION AND AIR-CONDITIONING

சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

✻ MOTOR CYCLE MECHANISAM

சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)

✻ DC WIRING (காலம் 03 மாதங்கள்)

ஆரம்பம்:-23,27.03.2005

மேலதிக விவரங்களுக்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல. 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 021-222 3335, 0773 086716

பிரத்தியேக கணனி வகுப்புக்கள்

அலுவலர்களுக்கான மாலைநேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு: திருமதி ஜீ.பாமினி, (43280)

சீவன் கோவிலடி, சுதுமலை, மானிப்பாய்.

CATWAS. COM

Computer Academy

- Diploma Courses
  - MS-Office 1,750/=
  - DTP 2,000/=
  - Hardware 1,500/=
  - Webpage 3,000/=
  - Video Mixing 2,500/=
- Certificate-Courses
- Microsoft kids program

புதிய பிரிவுகள் பிரிவு I 26.03.05 பிரிவு II 05.04.05 ஆரம்பம்

VACANCY

Multimedia and Hardware Technology கற்பிக்கத் தகைமையுள்ளவர்கள் 24.03.2005இக்கு முன்னர் தங்கள் சுயவிவரக் கோவையினை தபால் மூலமாக விண்ணப்பிக்கவும். இத்துறையில் குறைந்தது ஒருவருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

No. 26, Somasundram Avenue, Chundikuli

(சி-41542) Jaffna. T.P.: 021 222 3805


## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு தனது உச்சக்கட்ட விட்டுக்கொடுப்பைச் செய்துள்ளது என் றும் தெரிவித்தார்.

அரசகட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுக் கிடக்கின்றது என்று சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது உறுப்பினர்கள் கொல்லப்படுவது குறித்த கவலையையும் தெரிவித்தார். போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி, இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவில்லை என்றும் கூறினார்.

முன்னதாகப் புலிகளின் குழு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசியப் பிரிவுத் தலைவரும் பெல்ஜியம் வெளிவிவகார அமைச்சருமான ஜோன் மாரிகஸ், ஆசிய பணிக்குழுச் சபைத் தலைவரும், ஒன்றியத்துக்கான லக்ஸம்போர்க் மிஷன் தலைவருமான ஹென்றி ஸ்குமாச்சர் ஆகியோரையும் தமிழ்ச்செல்வன் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

பெல்ஜியம் அபிவிருத்தி அமைச்சர் பிரேவெஸனை அவர்கள் பின்னதாகச் சந்தித்துப் பேச இருந்தனர். (கு-க-12)

## கிளிநொச்சி நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒருபகுதி பொதுமக்களின் குடியிருப்புப் பகுதி என அப்பகுதி மக்கள் தெரிவித்திருக்கின்ற னர்.

பொதுமக்களின் குடியிருப்புப்பகுதியை அரசு சுவீகரிப்பதைக் கண்டித்து அப்பிரதேச மக்கள் கிளிநொச்சிப் பிரதேச செயலகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனால், செயலகப் பணிகள் யாவும் ஸ்தம்பித்தன. பிரதேச செயலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

பொதுமக்கள் பாதிக்காத வகையில் நில ஒதுக்கீடு செய்யப்படும் என்று பிரதேச செயலர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உறுதிமொழி வழங்கினார்.

அதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர் கலைந்து சென்றனர். (3-7-301)

## பொதுக் கட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தனக்கு ஏற்புடையதாகவோ அல்லது திருப்தி தருவதாகவோ இல்லை என அரசுத் தரப்பு நோர்வேக்குச் சுட்டிக்காட்டியுள்ளது என்றும் -

இதன் காரணமாகவே பொதுக் கட்டமைப்புக்கான இணக்கம் ஏற்படுவது இழுபறிப்படுகின்றது என்றும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே, அரசுத்தரப்புக்கு ஏற்புடையதாக்கும் வகையில் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான தனது திட்டத்தில் மாற்றங்களைச் செய்ய நோர்வே முயற்சி எடுத்துவருகின்றது.

இதற்காக ஒருபுறம் அரசுடனும் மறுபுறம் புலிகளுடனும் தொடர்ந்து நோர்வே கருத்துப் பரிமாற்றம் செய்துவருவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவுடன் நோர்வே அனுசரணைக் குழுவின் சார்பில் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று முன்தினம் கொழும்பில் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உத்தேசத் திட்டத்தில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என அரசுத்தரப்பு அடம்பிடிப்பதால் பொதுக் கட்டமைப்புக்கான இணக்கம் ஏற்படுவது மேலும் தாமதமாகலாம் எனக் கருதப்படுகின்றது. (கு-க)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கி மேலே செல்லவிடாது தடுத்துப் பின்வாங்கச் செய்தனர். இதன் போது பொலீஸாருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே பெரும் வாய்த்தர்க்கம் மூண்டது. நிலைமை விபரீதமடைவதைத் தவிர்ப்பதற்காக ஆர்ப்பாட்டக்காரர்களை அமைதி பேணுமாறு பேரணி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டனர்.

பொலீஸாருடன் வாக்குவாதம் இடம் பெற்ற வேளை அப்பகுதியில் மாவைசேனாதிராஜா எம்.பி.காணப்படவில்லை. இதனை அவதானித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மாவை எம்,பியை அழைத்து வாருங்கள் என்று கோஷமிட்டனர். எனினும், அவர் அப்பகுதிக்கு வருகை தரவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரையும் அமைதி காக்குமாறும், பிரதேச செயலகத்தில் ஒன்றுகூடுமாறும் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலகத்தில் உள்ள கலாசார மண்டபத்தில் ஒன்று கூடினர். அங்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவமகாராசா தலைமையில் கண்டனக் கூட்டம் இடம் பெற்றது. சிறப்புரை ஆற்றுமாறு ஈழவேந்தன் எம்.பி அழைக்கப்பட்டார். அவரது உரை இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டனர். "பேசிக்கொண்டிருப்பதை விடுத்து உருப்படியான நடவடிக்கை எடுத்து எங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பிச் செல்ல வழி காட்டுங்கள்" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குரல் எழுப்பினர். இதனால் இடைநடுவில் பேச்சை நிறுத்திக்கொண்டு மேடையை விட்டு இறங்கிச் சென்றார் ஈழவேந்தன் எம்.பி. பின்னர் வலி.வடக்கு இடம் பெயர்ந்தோர் சார்பில் ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் வலி.வடக்கு உதவிப்பிரதேச செயலர் குமாரசாமி முரளிதரனிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தினதும், வலி. வடக்குப் பொது அமைப்புகளின் ஒன்றியத்தினதும் மகஜர்கள் தனித்தனியே கையளிக்கப்பட்டன. அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ஐ-86-70-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.